விலை சதம் 50 ★ பக்கங்கள் — 12

சகலவித பல் வியாதிகளையும்
போக்கவல்லது
அண்ணா பற்பொடி
இலங்கையின்
எப்பாகத்திலும் கிடைக்கும்.
கூடுதலாக அண்ணா
பற்பொடியை வாங்கும்
வியாபரிகளுக்கு விசேடகழிவுண்டு
அண்ணா தொழிலகம்
இணுவில்
தொலைபேசி: 7412


# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR


எங்கள் மனமார்ந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
மங்களகரமான பொங்கல் பண்டிகையின் போது எங்கள் வியாபாரிகளுக்கும் வாடிக்கைகாரருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஐம்பத்தொரு ஆண்டுகளாக எமக்குத்தந்த ஆதரவை மேலும் நல்குமாறு பணிவன்போடு வேண்டுகிறோம்.
மில்க்வைற்-
யாழ்ப்பாணம்

மலர் 20 | தை 1 | ஸபரி 4 | ஞாயிற்றுக்கிழமை | (14—1—79) | இதழ் 335

# கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை மூடப்படலாம்?

### அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 14-1-79 ஞாயிற்றுக்கிழமை 'ஈழநாடு' அலுலகத்துக்கு விடுமுறையாதலால் 15-1-79 திங்கட்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

-நிர்வாகி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை அரசு மூடிவிட ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

கலாசாலை மூடப்பட்டு இவ்விடத்தில் இராணுவமுகாம் ஒன்றை அமைக்க அரசுஆலோசித்து வருவதாகவும் தெரிகிறது

இதேவேளையில் அரசின் இம்முயற்சியைத் தடைசெய்ய தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கை எடுத்து வருகிறது.

நல்லூர் எம். பி. திரு.எம். சிவசிதம்பரம், யாழ். எம். பி திரு வெ. யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி. திரு எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோருக்கு இது குறித்து கிடைத்துள்ள புகாரைத் தொடர்ந்து இவர்கள் அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிகிறது.

## செல்வா சமாதிக்கு ராஜ்மோகன் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியின் பேரன் திரு. ராஜ்மோகன் காந்தி காலை 10 மணிக்கு யாழ்.நகரில் அமைந்துள்ள அமரர் தந்தை செல்வாவின் சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்துவார்

இன்று காலை ரயில் மூலம் யாழ், வரும் திரு. ராஜ்மோகன் காந்தி இங்கு பல பொது வைபவங்களிலும் கலந்துகொள்கிருர்.

### சாவகச்சேரியில் பொங்கல் விழா

இன்று மாலை சாவகச்சேரியில் நடைபெறும் பொங்கல் விழாவிலும் திரு. ராஜ்மோகன்காந்தி பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிருர்.

பொங்கல்
வாழ்த்துக்கள்
அனைவருக்கும் எமது தித்திக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
- 'ஈழநாடு''

## "புதுநம்பிக்கையுடன் தமிழர் எதிர்நோக்கும் பொங்கல்"
### 'அமிர்' செய்தி

(யாழ்ப்பாணம்)

தைபிறந்தால் வழிபிறக்கும் என்ற எமது முன்னோரின் நம்பிக்கைக்கு ஏற்ப பல துன்பங்களுக்கு மத்தியில் பொங்கல் நன்னாளை புது நம்பிக்கையுடன் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்றனர்-

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள பொங்கல் செய்தியில் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழிலாளர் தினமாக மேதினம் கருதப்படுவது போல உழவர் திருநாள் பொங்கல் விழாவாகும்.

முன்னூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட அந்நியர் ஆட்சியில் எங்கள் பண்பாட்டையும் தனித்துவத்தையும் அழிக்கும் எத்தனையோ சக்திகளுக்கு மத்தியில் பொங்கல் நன்நாளை தமிழ் ஈழ உழவர்கள் கொண்டாடத்தவறவில்லை.

மார்கழிமாத மழைமுகில்கள் கலைந்து புதிய ஒளியோடு பிரகாசிக்கும் பகலவனை உள்

[12-ம் பக்கம் பார்க்க]

## எம். ஜி. ஆரின் பொங்கல் செய்தி

சென்னை, ஜன. 13

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் போல் இந்த ஆண்டிலும் நடக்காமல் இருக்குமாறு தமிழக மக்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் வெளியிட்டுள்ள பொங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## கெக்கிராவையிலிருந்து வடபகுதிக்கு ஆயுத விற்பனை?

(கொழும்பு)

வடபகுதியைச் சேர்ந்த சிலருக்கு கெக்கிராவையிலிருந்து ஆயுதங்கள் இரகசியமான முறையில் விற்பனை செய்யப்

(12-ம் பக்கம் பார்க்க)

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
∴ பக்திப் பாடல்களா! ∴ பழைய புதிய சினிமாப் பாடல்களா!!
∴ நாதஸ்வரக் கச்சேரியா! ∴ 'பொப்' பாடல்களா!!
உங்கள் ரசனைக்கேற்ப விரும்பிய வண்ணம் ஒலிப்பதிவு செய்து தருவதில் முன்னணி வகிப்பவர்கள்
★ விக்ரர் அன் சன்ஸ் ★
100, ஸ்ரான்லி வீதி, (போன்: 7346) யாழ்ப்பாணம்.

எல்லோர் மனதிலும் உவகை பொங்க வாழ்த்துகிறோம்!
யாழ்.நகரின்
சிறந்த
படப்பிடிப்பாளர்
★ பாரத் ஸ்ருடியோ ★
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 252

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY PERIODICALS DIVISION RECEIVED 1979

## வடமாகாணத்தில்
# சீன அக்கியூபங்சர் சிகிச்சை

இளம்பிள்ளைவாதம் பாரிசவாதம் மற்றும் சகல வாதரோகங்களுக்கும் பிறவியாக செவிடு ஊமை ஆனோர்க்கும், கபாலஇடி, முடியுதிர்தல், திக்குவாய், பீனிசம், ஆஸ்த்மா, பாலியல் குறைபாடுகட்கும், குழந்தைகளின் உடல், உளவளர்ச்சிக்குறைவு, மற்றும் பலவற்றிற்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

இங்கிலாந்தில் நடைபெற்ற அக்கியூபங்சர் மகாநாட்டில் கலந்து கொண்டு மொக்கியக்சன், [Moxibustion] அக்கபானு, (Akabana) தங்கஊசி [Golen needle] வெள்ளி ஊசி [Silver needle] பாவிப்பது போன்று பல நவீன முறைகளையும் பின்பற்றுகிறோம்.

சிகிச்சைநிலையங்கள்:-

### 1. பரமானந்தா வைத்தியசாலை
இணுவில் கந்தசாமீ கோவில் வீதி.
இணுவில்.

நேரம்:- 8-00 காலை 11-30 மு. ப. வரை தினசரி சிகிச்சை அளிக்கப்படும்.

### 2. அக்கியூபங்சர் கிளினிக்
புகையிரத நிலைய முன்னல்
கொடிகாமம்.

நேரம்:- 1-00 பி. ப முதல் 2-30 பி. ப வரை தினமும் சிசிச்சை அளிக்கப்டடும். சிகிச்சை 20 முதல் 80 நாட்களுக்கு தொடர்ந்து அளிக்கப்படும். தங்கி சிகிச்சைபெற விரும்புவோர்க்கு வேண்டிய வசதி செய்து தரப்படும். 1302

# ராஜு ஸ்ரோர்ஸ்

எங்கள் வாடிக்கையாளர், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மங்களகரமான

## பொங்கல் வாழ்த்துக்கள்

### இறக்குமதி செய்யப்பட்ட

நெற்குத்தும், மாவு அரைக்கும் இயந்திரங்கள் அதன் உபஉறுப்புக்கள், மின்சார மோட்டோர்கள், மின்சார உபகரணங்கள், மெசின் பெல்ட்டுக்கள்,

பழச்சத்துக்கள், வர்ண வகைகள், பிளாஸ்ரிக், எனமல், கிளாஸ், அலுமீனியச் சாமான்கள் மற்றும் விளையாட்டுச் சாமான்களும், சில்லறைச் சாமான்களும்.

தொகையாகவும், சில்லறையாவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள

67 & 69 கஸ்தூரியார்வீதி
P. O. Box 64.
போன்: 372 யாழ்ப்பாணம். தந்தி: ராஜு

### வகுப்புகள்

Advance Level இரசாயனவியல் ஏப்பிரல் மீட்டல் வகுப்புகள் ஆகஸ்ட் ஏப்பிரல் 80 க்கான வகுப்புகள் ஆசிரியர் திரு. சிறீதரன் அவர்களால் நடாத்தப்படுகின்றது. 9-ம் 10-ம் வகுப்பிற்கான பாடங்கள் நாளை முதல் நடைபெறவுள்ளது. மாணவர் போதனு நிலையம் 77 அரசடி வீதி, யாழ்ப்பாணம். 1304

# வரி விளம்பரம்

### தேவை

தேவன்ஸ் சீயாக்காய் பவுடர் பைக்கற் செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தேவாஸ் கிறைண்டிங் மில், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1300

### பயிற்சி

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), Auto Electricians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் மூதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1291

## CANTABIA INSTITUTE
(SHOOT OF OXONIA)

வகுப்புகள்: IAA பகுதி (I, II, III) Just Commenced
BASIC ENGLISH 15-1-79
விரிவுரையாளர் திரு. I.T. BENEDICT
விபரங்களுக்கு!-
சங்கரப்பிள்ளை கட்டிடம்.
166, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் 1316

### விற்பனைக்கு

புத்தம் புதிய ஹித்தாச்சி 3 இன் 1, சன்யோ கசற் றெக்கோடர் (பெரியது) 2 இன் 1 விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: செ. நிமலன், 10, சட்டநாதர் வீதி, நல்லூர் அல்லது றமணிகோப்பறேசன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1280

இரண்டு சில்லு உழவு இயந்திரம் (யன்மார் டீசல்) கூடாரத்துடன்கூடிய பெட்டி, பிளவு கலப்பை, இரும்புச் சில்லு, கலப்பை முதலியவற்றுடன் விற்பனைக்கு உண்டு. மா. சிவராஜா, 97, தொட்டியடி, வீசுவமடு. 1229

Architects JAYANN Engineers & Contractors

# ஜெயன்
9. உரும்பராய் சந்தி
உரும்பராய்.

கட்டிடக்கலை நிபுணர், பொறியியலாளர், நிர்மாணிப்போர். கட்டிடப்படம் வரைவோர் குறைந்த செலவிலான வீடு கட்டுவோர்

**தேவை** மேசன், தச்சன், வர்ணம் தீட்டுவோர், கூலியாட்கள். விபரத்துடன் தபாலில் விண்ணப்பிக்கவும்.

கட்டிடப்பொருட்கள்: வழங்குவோர் விலைவிபரத்துடன் விண்ணப்பிக்கவும்.
(1290)

### கல்வி

பதினொரு வருடங்களாக பாலர் கல்வியில் சிறந்து விளங்கும் விக்கினேஸ்வரா பாலர் பாடசாலையில் [26 பிறவுண் வீதி நீராவியடி] உங்கள் பாலர்களை சேர்த்து பலனைப்பெறுங்கள் ஆசிரியை செல்வி ச. தம்பிராசா. 1305

## மங்களப் பெருநாளில்
## தங்குக இன்பம் எங்கும்!

நறுமணங்கமழும் தூய சைவ உணவிற்கு
கிறீன்லன்ட்ஸ் கோட்டல்
நவீன வசதிகள் கொண்டு
தங்கும் அறைகளும் உண்டு.
தலைநகரின் தலைசிறந்த கோட்டல்

# கிறீன்லன்ட்ஸ் கோட்டல் லிமிட்டெட்

3-ஏ. சிறபறி காடின்ஸ், பம்பலப்பிட்டி
தொலைபேசி 85592-- 81986
தந்தி; கிறீன்லன்ட்ஸ்.

### WANTED

Girls with G. C. E. Adv. Level including Chemistry and Zoology and credit in English in G. C. E. O/L for appointment as Trainee Nurses. Dr T Gangadharan, Van. West Clinic, Vannarponnai. 1303

### WANTED

Engineers or Experienced Technicians to invest and manage on commission basis.

(1) MOTOR VEHICLES WORKSHOP.

(2) FARM VEHICLES WORKSHOP.

Only persons capable of recruiting and Managing Technicians and labour should apply for terms to Autos Ltd., Jaffna. 1298

இப்பொங்கற் புதுநாளில் மங்களமாய் வாழ்த்துகிறோம்;

## அன்பு நிறைந்த வடமாகாண விவசாயப் பெருமக்களே!

உங்கள் உற்பத்திப் பொருட்களான


★ வெங்காயம் ★ மிளகாய் ★ கிழங்கு ★ உழுந்து ★ பயறு

போன்ற சகலவற்றையும் கூடிய விலைக்கு விற்கவேண்டுமா?

உண்மையும் நேர்மையும் நிறைந்த சிவா ரேடிங் கம்பனிக்கு வாருங்கள்

# சிவா ரேடிங் கம்பனி

137 & 139, 5-ம் குறுக்குத் தெரு — கொழும்பு-11.
தொலைபேசி: 20414 & 34303



# வடக்கே போகும் ரயில்

உடுவில் ஜே. என். இன்பராஜன்

[1]

கோட்டை புகையிரத நிலயத்தில் மனித எறும்புகள் நெருக்கமாக ஊர்ந்து கொண்டிருந்தன. அவற்றை அந்த நீண்ட ரயில்தன் உடம்பெல்லாம் பரந்திருந்த வாய்களால் விழுங்கிக் கொண்டிருந்தது.

பல மக்கள், பலதரப்பட்ட உணர்ச்சிகள்.

'அஜந்தா! கிழமை தவருமல் லெட்டர் போடு' என்று சொல்லி பிரசவத்துக்குப் பிறந்த வீட்டுக்குப் போகும் தன் இளம் மனைவியை வழியனுப்பும் ஒரு சிங்கள வாலிபன்.

வேலைக்காரச் சிறுவனை ஊருக்கனுப்ப ஸ்டேசனுக்கு வந்துள்ள ஒரு கடை முதலாளி.

—இளமைத் துடிப்புடன் ஓடும் ரயிலில் துள்ளி ஏறும்- விடுதலைக்கு வீட்டுக்குப் போகும்- ஒருமாணவன்.

கொழும்பிலிருந்து வடக்கே காங்கேசன்துறைவரை போகும் அந்தமெயில் ரயில் மலைப்பாம்பு போல ஊர்ந்து செல்லத் தொடங்குகிறது. வேறு தண்டவாளங்கள் ஓடும் ரயிலின் சில்லுகளை நோக்கி வருவதும் விலகுவதுமாக இருக்கின்றன. தந்திக்கம்பிகள் மேலே எழுவதும் கீழே தாழ்வதுமாக இருக்கின்றன. குளிர்ந்த காற்று உள்ளே வந்து உடலைத் தழுவிக் கொண்டது.

சட்டென்று ரயில் நின்றது. காரணத்தை அறியும் ஆவலுடன்சிலர் வெளியே எட்டிப் பார்த்தார்கள். இருட்டில் எதுவும்தெரியவில்லை.வெளியே சாய்வான மேட்டில் வளர்ந்திருந்த மூங்கில்கள் மெல்லிய உரசலோடு தமக்குள் இரகசியம் பேசிக்கொண்டன. ஓடையில் ஓடிக்கொண்டிருந்த நீர் சந்திரவொளியில் வெள்ளியாக மின்னியது.

'என்ஜின் ட்ரபிள்' என்று பேசிக் கொண்டார்கள். பதினைந்து நிமிடங்களுக்கு அப்புறம்ரயில் ஓடத் தொடங்கியது. ஆனால் ரயிலில் விளக்குகள் எரிய வில்லை. இருள் மனித உடல்களை நசுக்கியது. 'ரயில்வே'யைத் திட்டினார் ஒருவர்.

[2]

'டிக்கட்' பரிசோதகர்கள் வந்தார்கள். சிவனேசனும் அன்று 'டியூட்டி'யிலிருந்தான்; சிவனேசனும் அவன் சகாக்களும் தங்கள் கடமையை ஆரம்பித்தார்கள். இரண்டாம் வகுப்பில் நெரிசல் அதிகமில்லை. அவனுடைய அனுபவத்தில் 'டிக்கெட்' எடுக்காமல் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்பவர்களைக் கண்டது குறைவு. ஆனாலும் மூன்றும் வகுப்பு 'டிக்கெட்'டுடன் இரண்டாம் வகுப்பில் வந்திருப்பார்கள்.

சிவனேசன் ஒரு கடமை வீரன். பிரயாணிகளிடம் 'டிக்கெட் செக்' பண்ணும் தன் வேலையை மிகுந்த பொறுப்பு உணர்ச்சியுடன் செய்வான். லஞ்சம் வாங்குவது 'லைஃப்' இல் அவன் வெறுக்கும் ஒன்று. சில நாட்களுக்கு முன் 'டிக்கெட்' இல்லாமல் பயணம் செய்த ஒரு படித்த- வேலையில்லாத இளைஞனின் மேல் தன்னையறியாமலே இரக்கப்பட்டு, தன்னுடைய பணத்தில் அந்த இளைஞனுக்காக 'தண்டம்' கட்டி, ரிசீற்றையும் அவனிடமே கொடுத்ததும்... அந்த இளைஞன் நன்றிப் பெருக்கோடு கைகளைக் கூப்பியதும்... இப்போது சிவனேசனின் மனதில் நிழலாடிற்று,

'தலாவ' ஸ்டேசனில் 'என்ஜின்' மாற்றப்பட்டு வேறொரு' என்ஜின் பொருத்தப்பட்டது. அந்த 'என்ஜின்' நெடிய ரயிலை இழுக்க முடியாமல் நகர்ந்து கொண்டிருந்தது.

தூங்குகிறவர்களைத் தட்டியெழுப்பி 'டிக்கெட்' கேட்க வேண்டியிருந்தது. விழித்ததும், அசதியோடு பார்க்கிற கண்கள்... ஆத்திரத்தோடு பார்க்கிற கண்கள்... வழக்கம் போலவே விதம்விதமான குணசித்திரங்கள் சிவனேசனின் கண்களில் தட்டுப்பட்டன.

தன் சின்னக் கை விரல்களால் தாய், தந்தையின் மூக்குகளை மெல்ல அழுத்துகிற குழந்தை... அதைச் சட்டை செய்யாமல் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருக்கிற அந்தக் கணவன்-மனைவி. கனமான சட்டைப் பையைக் கையால் இறுகப் பொத்தியபடியே தூங்கும் ஒரு வேஷ்டிக் காரர்...வெளியே, சின்னதாய் அழகாய், அமைதியாய் ஓடி மறைகிற மரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவ் வழகிய பெண்... அவள் அழகைப் பார்வையால் ரசிக்கும் அவ்வாலிபன்... யன்னலோரத்தில் நின்று ஓடும் ரயிலுக்கு வெளியே பேப்பர்களைக் கசக்கிப்போடும் பத்து வயதுச் சிறுமி... பள்ளத்தில் உருண்டு மறைகின்ற அப் 'பேப்பர்' துண்டுகள்.

சின்னச்சின்ன ரசிக்க வேண்டிய அந்தக்காட்சிகளை ரசித்துக் கொண்டே சிவனேசன் தன் கடமையில் ஈடுபடலானான்.

'டிக்கட் பிளீஸ்'

அனுராதபுரம் ஸ்டேஷனில் திரும்பவும் வெறொரு என்ஜினை மெயில் ரயிலுக்குப் பொருத்தினார்கள். அந்தக் 'கனேடியன் என்ஜின்' தனக்கு முன் ரயிலை இழுத்த தன் நண்பனைப் போலல்லாது அசுர வேகத்துடன் ஓடத் தொடங்கியது அந்த 'மெயில் ரயில்' லயம் தவருத ஓசையுடன் ஓடிக் கொண்டிருக்கிறது.

[3]

அந்தக் 'கம்பார்ட்மெண்டில்' அசல் யாழ்ப்பாணத் தமிழ் வாடை வீசிக் கொண்டிருந்தது. ஒருவர்- அவரைச் சுற்றி ஒரே இளவெட்டு முகங்கள். அவரை ஏனையோர் 'மாஸ்டர்' என்று மரியாதையாக அழைத்தார்கள். யாழ்ப்பாணத்தில் பிரபலமான கல்லூரி ஒன்றில் ஆசிரியர் என்பது அவர்கள் பேசும்போது சிவனேசனின் காதுகளில் விழுந்தது!

சிவனேசன் அந்த 'மாஸ்டர்'ரை நோக்கி, ''டிக்கெட் பிளீஸ்'' என்ருன். மாஸ்டரைத் தொடர்ந்து மற்றவர்களும் தங்கள் 'டிக்கெட்டுகளைச் சிவனேசனிடம் நீட்டினார்கள். 'மாஸ்டரு'க்குப் பக்கத்திலிருந்த ஒரு சிறுவன் திருட்டு முழி முழித்தான். முதலில் பொக்கட்டுக்களைத் துளாவினான். பிறகு எழுந்துநின்று தன் கைப்பைத் துளாவினான். இடிந்து போய் உட்கார்ந்து கொண்டு, ''டிக்கெட் எடுத்தனான் ஐயா! காணேல்லை'. என்ருன.

ஒசிப் பிரயாணிகளின் வாடிக்கையான நடிப்பு, பேச்சு!

(9-ம் பக்கம் பார்க்க)




யாழ்நகர்

விநாயகர்

ஸ்ரோர்ஸ்

ஸ்தாபனத்தினர் தங்களது வர்த்தக அன்பர்கள், நல ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தங்களது இதயம் கனிந்த

பொங்கல் வாழ்த்துக்களை

தெரிவித்துக்கொள்கிருர்கள்.

உங்களுக்குத் தேவையான

● பலசரக்கு, மற்றும் சாப்புச்சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

விநாயகர் ஸ்ரோர்ஸ்,

166, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7787

வாடிக்கையாளர் அனைவருக்கும்

எமது

மனப்பூர்வமான

பொங்கல் வாழ்த்துக்கள்

நாகமுத்து அன் சன்ஸ்

48-50,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7475

எமது வாடிக்கையாளர்கள்

அனைவருக்கும்

பொங்கல் நல்வாழ்த்துக்கள்

உங்கள் தேவையே எமது சேவை

- சில்லறைப் பொருட்கள்
- சாய்ப்புச் சாமான்கள்
- பாடசாலை உபகரணங்கள்

மற்றும்

நம் நாட்டு உற்பத்திப் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்

சுப்பிரமணியம் ஸ்ரோர்ஸ்

30|1, மானிப்பாய் வீதி -- யாழ்ப்பாணம்

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்

அனைவருக்கும்

இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

சகலவித றேடியோக்கள், மணிக்கூடு, கைக்கடிகாரம் விற்பனையிலும், திருத்துவதிலும்

யாழ். நகரில் முன்னணி வகிப்பவர்கள்

மலாயன் றேடியோஸ் சேர்விஸ்

45, கஸ்தூரியார் வீதி -- யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7885

உங்களுக்கு எமது

தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

அண்ணா தொழிற்சாலை (கிளை)

நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

ANNA INDUSTRY (Branch)

4, MODERN MARKET, JAFFNA.

T'phone: 7413

"தமிழரெனும் எல்லோர்க்கும் தையெனும் திங்கள்-மெய் தாங்கிவரும் பொங்கலதே தனிப்பெரிய பொங்கல்!,

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

நல் வாழ்த்துக்கள்

"ஸ்ரீ தாமோதரவிலாஸ்"

தரம் மிக்க சைவ உணவு- சிற்றுண்டி வகைகளுக்கு யாழ். நகரில் தலைசிறந்த ஸ்தாபனம்

239, காங்கேசன்துறை வீதி, (தொலைபேசி: 7065) யாழ்ப்பாணம்.

அன்ருட தேவைகளுக்குரிய தரமிகு பொருட்களை தெரிவு செய்ய தொடர்பு கொள்ளுங்கள்:

"ஸ்ரீ ராமகிருஷ்ணா"

மகாராஜ நிறுவனத்தாரின் உற்பத்திப் பொருட்களின் வடமாகாண விநியோகத்தர்கள்:

இல: 9, நவீனசந்தை, ஆஸ்பத்திரிவீதி. (தொலைபேசி: 7497) யாழ்ப்பாணம்.

வயல் விளைந்தால் வையம் தழைக்கும்
உழவர் திருநாள் தைப்பொங்கல் நன்னாளில்
எல்லாருக்கும் எமது

**வாழ்த்துக்கள்**

அறுசுவை உணவுக்கு யாழ்.நகரில்
புகழ்பெற்ற சைவஹோட்டல்

# கிஸ்ணபவான்

ஓடர்கள் உடன்கவனிக்கப்படும்.

**KISHNABHAWAN**

37, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது

**பொங்கல் வாழ்த்துக்கள்!**

சைக்கிள் ஒரு சாதாரண மனிதனின் உற்றதோழன்

**சைக்கிள்உப உறுப்புகள், கைக்கடிகாரங்கள், மணிக்கூடுகள், மற்றும் சாய்ப்புச்சாமான்கள்**

நிதான விலையில் பெற எம்மிடம்
வாருங்கள்.

## சேது சைக்கிள் ஸ்ரோர்ஸ்

24, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.



வையகம் பொலிக! வாழ்வு மலர்க!
அனைவருக்கும் எமது

**பொங்கல் வாழ்த்துக்கள்!**

மனிதன் உயிர் வாழ உணவு
அவசியம். உணவுக்கு சுத்தமும்
சுவையும் அவசியம்.
ஒருமுறை எம்மிடம் விஜயம்செய்யுங்கள்

## நியூ வி. எஸ். எஸ். கே. ஹோட்டல்

(உரிமையாளர்: வி. வில்வரத்தினம்)

152. (348) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது இதயங்கனிந்த

**தைப்பொங்கல் வாழ்த்துக்கள்**

## விஜிதா மோட்டோர்ஸ்

43, ஸ்ரான்லி வீதி -- யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7735



எல்லோரும் இன்புற்றிருக்க
இப்பொங்கல் புதுநாளில்

**வாழ்த்துகிறோம்**

# சுந்தரம் பிரதர்ஸ்

ஆயுள்வேத மருந்துகள் மருந்துச்சரக்குகள்
கோவில் அபிஷேக திரவியங்கள்
விற்பனையாளர்கள்

175, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


சந்திப்பு : 3

# எம். ஜி. ஆர். எனும் மூன்றெழுத்து

★ கலைமஞ்சரி ★

''அதோ... தலைவர் வருகின்றார்... எம். ஜி. ஆர். வருகின்றார்...'' என்ற குரல்கள், வானை முட்டிக் கொண்டிருந்தன...!

ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் ஒரே சலசலப்பு! எம்.ஜி ஆரை ஒரு தடவையேனும் நேரில் 'தரிசித்து' விட வேண்டுமென்ற துடிப்பு அவர்களுக்கு!

ஆனால் என்ன நடந்தது? அங்கு எம்.ஜி.ஆர். வரவில்லை!

அதற்குப் பதிலாக, எம்.ஜி. ஆரின் பெரிய உருவப் படத்தை (கட்அவுட்) தாங்கிய 'ஜீப்' வந்துகொண்டிருந்தது. எம். ஜி. ஆரை வரவேற்க, கூட்ட மைதானத்துக்கு அழைத்துச் செல்ல, வீதியின் இருமருங்கிலும் திரண்டிருந்த ஆண்களும் அதிகமான பெண்களும் அந்த 'ஜீப்'பை வரவேற்றுக் கொண்டிருந்தனர்!

நான் அங்கு அப்போது நின்றதால், இதனை 'நேரடியாகவே 'அனுபவிக்க முடிந்தது'.

'எம்.ஜி ஆர்; வரவில்லையே' ... ஜீப்மட்டுமே தானே வருகிறது' என்ற கவலை- ஏமாற்றம், மக்களுக்கு அதிகம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. முகங்களில் ஒருவித கேள்விக்குறி காணப்பட்டாலும், அது

## எம். ஜி. ஆர். 'கட்அவுட்'டுக்கு ஆரத்தி எடுத்த பெண்கள்

### மகான்

அவ்வளவு அருவருப்பாகத் தெரியவில்லை, மக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

நான் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தேன்.

அந்த ஜீப் நெருக்கமாக வந்துவிட்டது. 'எம்.ஜி ஆர். மக்களுக்கு கைஅசைத்த வண்ணம்' காணப்பட்ட பெரிய அளவு 'கட்அவுட்', 'ஜீப்'பின் முன்புறத்தில் தென்பட்டது.

மக்களைச் சமீபித்துவிட்ட அந்த ஜீப்பிலிருந்து, ஒரு குரல் எழுந்தது. பல அடுக்கு மொழிகளுடன், 'இரத்தத்தின் இரத்தமே, என்ற ஆரம்பத்துடன்-

எம். ஜி. ஆர். அவர்கள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்று வரவில்லை என்றும் ஆனாலும் அவர் மக்களுக்கு விடுத்துள்ள அன்பு

(11-ம்பக்கம்பார்க்க)


வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும்

**இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!**




வடஇலங்கையில் 50 ஆண்டுகளாக பேரும் புகழும்
பெற்ற ஸ்தாபனம்.
பல பொருட்களின் இறக்குமதியாளர்கள் நாமே......
அமோக விற்பனையில்......

- வின்செஸ்டர் டோர்ச்லைற்றுகள், (இனம் 6610 3 பற்றறி) (இனம் 4410 2 பற்றறி)
- பிறவுண் பேப்பர்
- பண்டிகைக்கால நண்பன் சுவையான சிக்கன தேநீருக்கு பல்கன் பால்டின்......

வர்த்தக விசாரணைகள் :

# முகமதலி அப்துலலி

5-7, பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 515.



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

# மல்ரி ஒயில்

## இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

(கே. கே. எஸ். வீதி -- இணுவில்)

MOL
TRADE MARK

**தித்திக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்களைக் கூறுகின்றார்கள்!**

சுகாதார முறையிலமைந்த சுத்தமான

- ★ தேங்காய் எண்ணெய்
- ★ நல்லெண்ணெய்
- ★ இலுப்பெண்ணெய்
- ★ வேப்பெண்ணெய்

ஆகிய எண்ணெய் வகைகளை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**MULTI-OIL INDUSTRIES LTD**

K. K. S. ROAD — INUVIL
T' PHONE: 339 CHUNNAKAM

## இலக்கியத்துறையில் இளையதலைமுறை - 2

# கட்சி, அணி என்று கட்டுப்படாமல் சுதந்திரமாக எழுதவேண்டும்!

இலங்கையில் இனக்கலவர காலம் எங்கும் பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த வேளையில்தான் அந்த நூல் வெளிவந்தது.

அது 'பலாத்காரம்'



பலாத்காரத்தை எதிர்த்தோ ஆதரித்தோ எழுதப்பட்டதல்ல அது ஈழத் தமிழ் இலக்கியத்துறையை அலங்கரிக்க வெளிவந்த சிறுகதைத் தொகுதி சத்தான பத்து சிறுகதைகள் முத்தாகக் கோர்க்கப்பட்டிருந்தன. அதன் ஆசிரியர்தான் சுதாராஜ்.

சுதாராஜ் புனைபெயர். உண்மையான பெயர் இராஜசிங்கம்.

அவரை முதல் தடவையாக நாவலப்பிட்டியில் 1977-ஆம் ஆண்டு நடந்த சாகித்திய விழாவில் சந்தித்தேன். சிறுகதைப்போட்டியில் இரண்டாவது பரிசைப்பெற வந்திருந்தார். நல்ல உருப்படி. அதைப்போலவே பெருத்த மனம் கண்டதும் ஏதோ பல நாட்கள் பழகிய நண்பரைப் போல் ஆகிவிட்டார்.

சந்திப்பவர்களை எல்லாம் நண்பர்களாக்கும் 'வித்தையை' எங்கு கற்ருரோ?

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழையமாணவர். இருபத்தைந்து வயது கூட ஆகாத வாலிபர். புத்தளம் சிமெந்துத் தொழிற்சாலையில் தொழில்நுட்பவியலாளராக இயந்திரங்களுடன் மாரடிக்கும் இவரால் எப்படித்தான் மானிட வாழ்வின் நெளிவு சுளிவுகளையும் உள்ளத்து உணர்வுகளின் நுட்பங்களையும் அறிய முடிகிறதோ?

இவரது சிறுகதைகளை வாசித்து முடித்ததும் நெஞ்சை குலுங்கிவிடும் உணர்ச்சியால் எம்மைத் துடிக்கவைத்து விடுவார். வெறுமனே சிந்தனைகளைக் கட்டுரையாக்கிவிட்டு, கதையென்ற முத்திரை குத்தும் 'குணம்' இவரிடம் இல்லை. உணர்ச்சிக்கு முதலிடம் கொடுத்தே கதைகளை புனைவார். உதாரணம் புதுச்சட்டை என்ற சிறுகதை, பொங்கலுக்குப் புதுச் சட்டைக்காக ஏங்கும் ஒரு சிறுவனை- உணர்வு பூர்வமாகச் சித்தரித்து நுணுக்கமாக சாதி அமைப்பினுல் தாழ்த்தப்பட்டவர்கள் வஞ்சிக்கப்படுவதைக் காட்டி நெஞ்சில் சாட்டையடி அடிக்கிருர். வார்த்தைகளால்... பலவற்றைக் கூறிக் கொண்டே போகலாம்.

சந்தித்தேனு?

சாகித்திய விழாவில் அவரைச் சந்தித்தபோது கதைகளைப் போலவே ஆளும் ஒரு தலைப்புகள், கதைவாசித்து முடிந்ததும் புரியாத முடிவு தலைப்பைப் பார்த்தால் புரிசிடும். உதாரணம் யாநருன் தோட்டத்து மல்லிகை பத்திரிகை, சஞ்சிகைளில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட கதைகள் வெளிவந்துள்ளன.

மொழி, இனம் என்ற குறுகிய மனப்பான்மை இல்லாமல் பரந்து விரிந்த மானுடநேசிப்பு உள்ளவர் அவர்.

பயணம் என்ற சிறுகதை அதற்கு நல்ல உதாரணம். இலங்கையில் நடத்தப்பட்ட பல சிறுகதைப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்றிருக்கிருர்.

இவருடை மனதிலே விளைந்த கற்பனையை தன் உள்ளத்திலும் சிறைப்பிடித்து அழகான சித்திரங்களை வரைவர். இவரது தம்பி குணசிங்கம் அண்ணன் கதை எழுத தம்பி படம்வரைய நல்லசகோதரர்களை 'பலாத்காரம்' சிறுகதைத் தொகுதிக்கு முழுப் படங்களையும் வரைந்தவர் எழுத்தாளரின் தம்பியே, அவரது சித்திரங்கள் சிறப்பானவை 'புதுச்சட்டை' என்ற சிறுகதைக்கு வரைந்த சித்திரத்தில் அந்தச் சிறுவன கிழிந்த சட்டையுடன் நிற்கின்ற காட்சி- கதையும் சித்திரமும் போட்டி போடுகின்றன.

சித்திரக்காரத் தம்பியும் பழகுவதற்கு இனியவர். நல்ல கலைஞர்

### காவலூர் எஸ். ஜெகநாதன்

உணர்ச்சி பூர்வமான மனிதன். ஈழத்தில் எழுத்தாளர் இயக்கம் சீரழிந்து விட்டதாகக் கொதித்தார். கட்சி, அணி என்று கட்டுப்பட்டு இப்படித்தான் எழுதவேண்டும் என்ருல் எப்படி? என்று கேட்டார். எழுத்தாளன் சுதந்திரமாக எழுதவேண்டும். அவன் வெறும்யந்திரம் அல்ல.

அவர் கூறுவதும் சிந்திக்க வேண்டியது தான்.

"இவ்வளவு காலமும் சீதனம், சாதி என்று எழுதிக் குவித்தார்களே அழிக்க முடிந்ததா? இல்லையே ஏன்" என்கிருர் கோபத்தோடு. அரசியல் சேற்றைப் பூசிக் கொண்டால் மக்கள் அந்தக் கண்ணேட்டத்தில்தானே பார்ப்பார்கள்.

ஆரோக்கியமான கருத்துக்கள், சமூகத்தை மனிதாபிமானக் கண்கொண்டபார்வை இவற்றின் விளைந்தவை இவரது கதைகள். பத்தில் ஒன்று என்றில்லாமல் இவரது கதைகள் எல்லாமே தரமாக அமைவது மற்ருெரு சிறப்பு.

யாழ்ப்பாண சமூகத்தவர்களை நாடிபிடித்து வைத்திருப்பவர். யாரும் அணுகாத பிரச்சினைகளையெல்லாம் இவரது கதை அணுகியிருக்கிறது. பிரதேசப் பேசசு வழக்கை அந்தப் பிரேதேசம் தவிர்ந்தவர்கள் புரியாமல் 'விளங்காத கதை' எழுதுபவர்கள் பலர். சுதாராஜ் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கை அளவோடு கையாள்பவர். அனைவருக்கும் புரியும் படிஅழகாகக் கையாள்வதாக திரு. வ. இராசையா குறிப்பிரமிப்பார்.

"டேய்மாடு எழும்படா" என்று தொடங்குகிறது 'நாணயக்கயிறு' என்ற சிறுகதை. நாணயக்கயிற்ருல் கட்டி இழுப்பதுபோல் கதை மூலம் வாசகர்களைக் கட்டி இழுத்து வைத்திருப்பார். அப்படி ஒரு சுவையான மொழிநடை இவருக்குக் கைவரப் பெற்ற ஒன்று. கதைத் தலைப்புகளிலும் ஒருபுதுமை இவரிடம். உருவகப்படுத்தும்

தேவன்- யாழ்ப்பாணம் அவர்கள் முகவுரையில் குறிப்பிட்டதுபோல் எதிர்காலத்தில் பிரகாசிக்கப் பொகின்றவர் சுதாராஜ். தேவன், சொக்கன் போன்றவர்களிடம் பயின்றவரல்லவா? அத்திவாரம் பலமானது. மாளிகை கம்பீரமாக உயரும்.

ஈழத்து இலக்கியத்துறை பயன்பெறும்.

### எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியவர்கள்

இமயத்தின் மிகஉயர்மான எவரெஸ்ட் சிகரத்தில் இதுவரையில் 80 பேர் ஏறியிருக்கிருர்கள். இவர்களில் மூன்றுபேர் பெண்களாவர்.

அண்மையில் ஜெர்மன்- பிரஞ்சு கோஷ்டியொன்றின் 7 பேர்இச் சிகரத்தை ஏறிமுடித்தார்கள். இவர்களில் ஒருவர் 35 வயதான போலிஷ்இனத்தவரான பெண்ணுவார். இவர் பெயர்செல்வி வான்டாருட்சிவிஸ். இதற்குமுன் ஜப்பானியரான திருமதி ஜின்கோதாயே என்பவரும் திபேத்தியரான திருமதி வாட்டோக் என்பவரும் ஏறியிருக்கிருர்கள். எவரெஸ்ட் சிகரம் 8848 மீட்டர் உயரமுடையது.

### அகிம்சையில் துணிச்சல்

அகிம்சையில் துணிச்சல்என்பது மரணத்தை ஏற்றுக் கொள்வதில் தான் தங்கியுள்ளதேயன்றி மற்றவர்களைக் கொல்வதில் அன்று.

—மகாத்மாகாந்தி

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிக்கும்
பொங்கல் வாழ்த்துக்கள்!
யாழ். நகரில் ஆடைஅணிகளின் நாயகன்
தரத்தில், பாவனையில் சிறந்த சகல
ஜவுளிகளுக்கும் சிறந்த ஸ்தாபனங்கள்
லிங்கம் சில்க் ஹவுஸ்
இல. 18, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.
சோதி ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 14, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.

பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக
நவநாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹிரன் ஜுவல்லர்ஸ்
போன் 444 தந்தி 'இரத்தினமஸ்'
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
ஃ அபிஷேகச் சாமான்கள்
ஃ அத்திபாரச் சாமான்கள்
ஃ விவாக முகூர்த்தப் பொருட்கள்
மற்றும்
கோவில் தேவைகளுக்கான
சகல
மருந்துச் சாமான்களும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச் சரக்கு வியாபாரம்)
76, பெரியகடை ... யாழ்ப்பாணம்.
போன் : 7135

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!
அழகிய பவுண் நகைகள்
தங்கப்பவுண் வைரங்கள்
கே. என். எம்.
மீரான் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
நகை வியாபாரம்
கன்னாதிட்டி -- யாழ்ப்பாணம்.
போன் : 585

அனைவர்க்கும் அன்புகலந்த
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
★ கவர்ச்சியான இழை
★ சொகுசான ஓட்டம்
★ நீடிய பாவனை
★ உத்தரவாதமுள்ள வேலைப்பாடு
ஆகியவற்றுக்கு உங்கள் தேய்ந்துபோன டயர்களை
எம்மிடம் புதுப்பியுங்கள்
நோர்தேண் இன்டஸ்ரீஸ்
112, ஸ்ரான்லி ரேட், (போன்: 7158) யாழ்ப்பாணம்.

# எண் சோதிட நோக்கில் புதிய ஆண்டு

1979ன் கூட்டெண் 8. இலங்கைக்கும் எண் எட்டுக்கும் அதிக தொடர்புண்டு. இதில் கூறப்படும் பலன்கள் பொதுப்பட உலக மக்கள் அனைவருக்கும் பொதுப்பட்டது. 1970ம் ஆண்டு என் எட்டின் ஆதிக்கத்தில் தொடங்கி அவ்வாண்டு எட்டின் ஆட்சிகரமான மாயையும் தந்திரமும் நிறைந்த ராகுவின் தனி ஆதிக்கத்தில் ஆட்சி நடந்து, அதன்மேல் ஒவ்வொரு வருடமும் முறைப்படி ஒவ்வொரு கிரகமும் ராகுவின் ஆதிக்கத்தின்கீழ் ஆட்சி செய்து 1978ம் ஆண்டை ராகுவின் ஆதிக்கத்தின்கீழ் எண் ஏழுக்குரிய சனி ஆட்சி செய்து, ராகுவின் பார்வையின் கீழ் சனி நின்ற குணங்களான நிட்டூரங்களையும், அழிவுகளையும் காட்டி 1979ம் ஆண்டைத் திரும்பவும் ராகுவே தனது தனி ஆதிக்கத்தின்கீழ் ஏற்கின்றது.

1979ல் ஒரு ஒன்றும், ஒரு ஏழும் இரண்டு ஒன்பதும ஆகிய எண்கள் சேர்ந்துள்ளன. இதில் ஒலியாட்சி எழுத்தாட்சி இல்லாத இரண்டு ஒன்பது எண்களையும் நீக்கினால் மிகுதி ஒரு ஒன்றும் ஒரு ஏழும்தான் ஆட்சி செய்கின்றன இவை இரண்டும் கூடி(1+7=8) என் எட்டின் அதிகாரத்தைக் கொடுக்கின்றது.

ஆகவே அதிகாரம்- அரசு- கௌரவம்- நேர்மை பொருந்திய எண் ஒன்றும்; பொறுப்பு- ஒழுங்கு- ஒடுக்கம்- கவனம்- பயபக்தி- பிடிவாதம் நிறைந்த எண் ஏழும் சேர்ந்து; அழிவு- மாயை- தந்திரம்- கஷ்டநஷ்ட அனுபவம். பொறுப்புணர்ச்சி- உலகப் போக்கில் சிக்கும் தன்மை- தன்னை அழித்தும் பிறருக்கு உதவும் தன்மையுடைய எண் எட்டின் கிரகமாம் ராகுவின் அதிகார ஆட்சியை உண்டாக்குகின்றன.

அடுத்துவரும் 1980ம் ஆண்டில் எண் ஒன்றும், எண் எட்டும் பூஜ்ஜியமும் சேர்ந்து விமோசனம்- மோட்சம்- விடுதலை- வெற்றி தோல்வி- சரணம்- விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை- சமாதானப் பிரியம் நிறைந்த எண் ஒன்பதின் ஆதிக்கம் நிறைந்த ஆட்சியை உண்டாக்க விருப்பதால் இந்த 1979ம் ஆண்டு உலகநாடுகளில் விடுதலையை நாடும் நாடுகளின் இயக்கங்களின் கொந்தளிப்பும், குழுவளியும் கூடுதலாகவேயிருக்கும். சர்வாதிகார ஆட்சிவர்க்கங்களிடையே தடுமாற்றமும், மாற்ற மனப்பான்மையும் தோன்றும். உலகநாடுகளில் தந்திரமான முறையில் கொலை- கொலை- அழிவு வேலைகள் அதிகரிக்கும். இயற்கையின் சீற்றமும் அழிவும் மத்திய கிழக்கு, கீழ்நாடுகளில் கூடுதலாக இருக்கும். இஸ்லாமிய உலகுக்கு கஷ்டநஷ்டம் கூடுதலாக இருக்கும், தற்போதுள்ள உலக அரசியல் நிலையில் கடைசி நாலுமாதங்களில் பெருமாற்றங்கள் ஏற்படலாம். பொதுமக்களிடம் ஆத்மீக வளர்ச்சி தோன்றும்.

பொதுவாக எட்டு எண்ணில் பிறந்தவர்களுக்கு காத்திராதவகையில் நன்மை, தீமைகள் ஏற்படும். ஆபத்துக்களில் சிக்க நேரிடும்- தற்போதுள்ள நிலையில் மாற்றங்களுண்டு. ஆண்டின் முற்பகுதி சிரமத்தின்மேல், பிற்பகுதி நன்மையாக அமையும். இரும்பு, இயந்திராதி சம்பந்தமான வியாபாரத் தொழில் செய்பவர்களுக்கு நல்ல முன்னேற்றமுண்டு. ஆத்மீகசக்தி தலைதூக்கும். அரசியல் துறையில் ஈடுபடுவோர் ஆண்டின் முற்பகுதியில் பலவித கஷ்டநஷ்ட இடையூறுகளை அனுபவிக்க நேரிடும். ஆண்டின் பிற்பகுதியில் ஓரளவு முன்னேற்றம் காணுவர். அரசியல் வாதிகள் தங்கள் உண்மை நிலையை உற்ற உண்மையானவர்களுக்கும் இலகுவில் காட்டமாட்டார்கள்.

## 8-ம் திகதி பிறந்தவர்கள்

நீதிநேர்மைக்குச் சோதனை தோன்றிச் சாதனையுடன் மேன்மையுமடைவர். ஆபத்துக்களிலும் சிக்க நேரிடும். எதிலும் துணிந்து செயல்படக் கூடியவர்களாக இருப்பர். இவர்களில் பெண்கள் ஆண்களாலும், ஆண்கள் பெண்களாலும் கஷ்டங்கள். ஏமாற்றங்களுக்கு ஆளாகக்கூடும். இவர்களில் சிலர் பெரும் கொலையாளிகள், சமூகத் துரோகிகளாகவும் மாறக் கூடும். இத்தனி எட்டு எண்காரர் ஒவ்வொருவருக்கும் அவர்களின் நிலைக்குத்தக்க அவரவர்களுக்கு மனத்திருப்தியானதாகவே இவ்வாண்டுப் பலனிலிருக்கும். இவர்களில் வியாபாரிகளாக இருப்பவர்களுக்குக் குறுக்கு வழிகளில் பொருளபண்டம் வந்து சேரும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்ச்சியுண்டு. சட்டத்துறை- அரசியல் துறையிலுள்ளவர்களுக்கு தலைமைப் பதவிகள் கிட்டும்.

## 17-ம் திகதி பிறந்தவர்கள்:

ஒன்றும், ஏழும் சேர்ந்து எட்டிற்கு ஆதிக்கம் கொடுப்பதால் இவர்களை அறியாது இவர்களுக்குத் தெய்வ அருள் நின்று ஒவ்வொன்றிலும் துணை புரியும் இவர்களின் காரியங்கள் நன்மையோ தீமையோ இவர்கள் நினைத்திராத காத்திராதஅளவில் தெய்வாதீனமாக ஒவ்வொன்றும் நடைபெறும். தோல்வியும், வெற்றியும் மாறிமாறிவரும். எதற்கும் இவர்கள் மனம் இறுங்கமாட்டார்கள் தருணத்திற்கேற்ற நல்லறிவுதோன்றும். ஆண்டின் முற்பகுதியில் பலவிதமான தடங்கல்கள் ஏற்படினும் பிற்பகுதி வெற்றியும், செல்வபோகமும் கிட்டும். இலட்சியவாதியான திடமான உறுதி ஏற்படும். தன் இலட்சியத்தையடைய உயிரையும் பொருட்படுத்த மாட்டார்கள். தமது வருங்கால சுகத்திற்காக எவ்வித கஷ்டங்களையும் அனுபவிக்கத் தயங்க மாட்டார்கள். கடல் கடந்த பிரயாணங்களையும் மேற்கொள்ளவர். சிலருக்குத் தீராதநோய் வியாதிகளும் ஏற்படக்கூடும். கஷ்டநஷ்டங்கள் ஏற்பட்ட விடத்திலேயே, பேரதிஷ்டமும் இவர்களைக் காத்திருக்கும். அவரவர் நிலையில் மிகவும் சக்தி வாய்ந்த மனிதராய்ப் புகழ் பெறுவர். சிலருக்கு ஏராளமான சொத்துச்சுகங்களும் காலத்தால் மங்காத புகழும் ஏற்படும். இவர்களுக்குத் தெய்வத்தன்மை உள்ளதால் நிலைமாறித் தன்நயம் கருதி உதாரித்தனமாக நடக்க முனைந்தால காத்திராத பேரழிவுக்கும் இடமுண்டாம்.

## 26-ம் திகதி பிறந்தவர்கள்

இரண்டும் ஆறும் சேர்ந்து எட்டின் ஆதிக்கம் கொடுப்பதால் பெண்மையே கூடிய ஆதிக்கம் பெறுகிறது. தந்திரமான மூளைப்பலம் தோன்றும். மற்றவர்களை ஏமாற்றக்கூடிய கதைவல்லமை, வசீகரத் தன்மை தோன்றும். மறைமுகமாக விரோதிகளாக இருப்பவர்களும் நேரில் கண்டதும் பயங்கி ஏமாந்து விடுவார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

- வரசி -

# கலையும் சமயமும்

[ இன் தொடர்ச்சி ]

இனி சமயத்திற்கும் கலைக்கும் உள்ள வித்தியாசத்தை நோக்குவோம். சமயம் ஒரு பொருளுக்கூடாக மறுபொருளுக்குச் செல்லத்தக்கது. அது கண்ணிற் காணும் பொருளுக் கூடாக புனிதமான உண்மைப் பொருளைக் காண்பது அத்துவிதவாதிளுக்கு உபயோகமானது; தெளிவாகப் பேசமுடியாதது.

கலையின் தன்மை விசாலமான இடத்தைக் கொண்டது. சுத்தமான ரசனைகள் கூட சாதாரண தற்போதைய கவர்ச்சிகரமான பொருட்களாக மாறிவிடும் ரசனைகளின் புனிதத்தன்மை குறையும் போது அதுவேறு வடிவம் கொள்கிறது. சிற்றின்ப, நல்லொழுக்க, சமய வடிவங்கள் தேவைப்படுகின்றன. இந்த கடன்வாங்கும் வடிவங்களையும் சேர்த்தால் கலைக்குரிய ஆரம்ப நிலை அளவு கடந்த பலவிரிவான நிலைகளாகும். கலா ரசனை புனிதம் மாத்திரமல்ல, முழுமையான தேவைகள் யாவற்றையும் கலைஞன்பெற இடமளிக்கிறது. இதைப் போலவே கலைஞனின் குறிக்கோளும் மிக அகன்றது சமயத்தில் குறிக்கோளும விடயமும், அவ்வளவு எல்லையற்றதல்ல.

கலையும், சமயமும் ஒன்றின் வளர்ச்சிக்கு ஒன்று துணை செய்கின்றது. ஆனால் ஒவ்வொன்றும் தனிச் சுபாவமும், தன்மையும் உடையது. நல்ல கலைகளெல்லாம் சமயமல்ல அல்லது எல்லாச் சமயக்கலைகளும் நல்லதல்ல. கலை என்றால் உண்மையான கலையாக இருக்க வேண்டும். அது கலைஞன் தகுதியைப் பூர்த்தி செய்ய வேண்டும். சமயம் அல்லது உணர்ச்சிகள் உடல் சம்பந்தமாக கலையின் தோற்றத்தில் கலைஞன் கூர்மையான மதியுடன் தனிப்பட்ட கவனம் செலுத்தவேண்டும். விடயத்தைப் பற்றிய எல்லா அடையாளங்களும் தெளிவாகவும், பூரணமாகவும் கொடுக்கப்படவேண்டும்.

அதனுடைய போக்கு உண்மையானதாகவும் சுயமானமுறையிலும் அமைந்திருக்க வேண்டும். அதனுடைய உருவம் எல்லாப் பகுதிகளையும், எல்லாக் கொள்கைகளையும் ஒன்றுகப் பொருத்துவதாக இருக்க வேண்டும்.

கலைக்கு இயற்கையான தன்மைகள் இருப்பதுபோல சமயத்திற்கும் உண்டு. அது நல்லதோ கெட்டதோ, ஆழமானதோ மேலெழுந்த வாரியானதோ, தெளிவானதோ மூட நம்பிக்கையுடையதோ, சமயத்தின் குறைந்த தேவைகளைக்கூட கலையால் பூர்த்தி செய்ய முடியாது, சமயம் உட்கருவிகளைச் சுத்தம் செய்ய வல்லது. இதனால் சமயத்தின் ஆரம்ப நிலை "நேர்மை ஊடுருவும் நேர்மை" எனக் கூறப்பட்டது. சமயம் ஆழமானது. உண்மை நிறைந்தது, கலைக்கு ஊக்கமளிப்பது. எத்தனையோ நூற்றாண்டு காலமாக மானிடர் சிந்தனைகளை ஆழமாகவும் அதிகசக்தியுடனும் எழுச்சி அடையச் செய்துள்ளது.

கலை தன் சொந்த அகலமான எல்லைகளையுடையது. அது சமயத்தை ஒத்துள்ளது, கலை என்றால் கலைதான் அது நீதியோ, விஞ்ஞானமோ, சமயமோ வேறெதுவுமோ அல்ல அதன் தகுதி மிகச்சிறப்பானது. மனித சிந்தனையளவு விரிந்தது. சமுதாயம், நாடு, இயற்கை, மனோசக்தி பிதம் இவை கலைஞனுக்காக உள்ளன. அங்கே அவன் சுயமாகத் திரிந்து தன்லட்சியத்தையும், அதற்கு உருவையும் தேடிக் கொள்ளலாம். உணர்ச்சியும் சிந்தனையும், இரத்தமும் சதையும்போல தொழிற்படும் பொழுது, அவன் தனது உருமாற்றத் தொழிலைச் செய்யலாம்.

இந்தியாவின் பிரதான சமயங்களில், சீனவிலுள்ள சமயங்களைப்போன்று மறுக்கத் தகுந்த கொள்கைகள் குறைவாக காணப்படுகின்றன. இந்துசமயப் விசாரகன், அகராதிகள், சமுகப்பிரஷ்டம், நரகாக்கினியின் அச்சம் ஆகிய இவைகளற்ற ஒரு பரந்த சமயமாகும் அளவற்ற உருவழிபாடுகள் அளவற்ற சமய உண்மைகளைப் பிரதிபலிக்கிறது அவை குறியீடுகளாகவும், கவிதைக்குரியனவாகவும் விளங்குகின்றன. இலக்கியம் சரித்திரம் என்பன பற்றியனவல்ல, "இந்துக்கள் தேவசபையில எத்தனையோ கடவுளர் உளர். அவை எல்லாத்திசைகளைக் காட்டுவனவாகவும், எல்லா உட்கருத்துக்களைக் காட்டுவதாகவும் உள்ளது" என்பது ஆனந்தகுமாரசாமியின் கருத்தாகும்.

எத்தனை கடவுளர் உளர்? இது உபநிஷத்தில் கேட்கப்பட்ட கேள்வியாகும். "மூன்று மூன்று நூறுகள் மூன்று மூன்று ஆயிரம் இதுவே கொடுக்கப்பட்ட விடையாகும். கேள்வி திரும்பவும் பலமுறை கேட்கப்பட்டது. அதற்குக்கிடைத்த விடைகள் "முப்பத்திமூன்று, ஆறு, மூன்று, ஒன்று" என்பனவாகும்.

"முன்பு கூறிய தொகைகள்?" இது கேள்வி. "அவை இறைவனின் பலவித சக்திகள்" கிடைத்ததில் இதுவாகும். இவை கலைஞனின் சிந்தனைக்கு உதவுகின்றன,

ஆங்கிலமூலம்:

## மோனிபக்சி (Moni Bagchee)

தமிழ்

## வ. குகசர்மா

உபநிஷத்துக்களும் பகவத்கீதையும் மிகவும் நெறிமுறைவான தத்துவக் கொள்கைகளை விபரிப்பன என்றாலும் இயற்கை அழகினை அவை தள்ளிவைக்கவில்லை. "கடவுள் பெருமையை பிரபஞ்சத்திற்பார், பூமியில் வசிப்பன அசைவன யாவற்றையும் கவனி" என

[11ம்பக்கம் பார்க்க]

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
தைபிறந்தால் வழி பிறக்கும்......
தையலர்க்கும் திருமண நாள்.
∘ எம்மிடம் கூறைச் சேலைகள்
∘ பட்டு வேட்டிகள்
∘ திருமண ஆடைகள்
∘ கிரிம்லின், பொலியஸ்டர்
∘ ரெற்ரோன்
அனைத்தும் பெறலாம்.
எண்ணம்போல் வர்ண ஆடைகளை
தேர்ந்தெடுக்கும் எழிற்கூடம்
கணேசன் ஸ்ரோர்ஸ்
63-78, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7169 தந்தி "கணேசன்"

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், அபிமானிகளுக்கு எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!
தரமான இலங்கை ஓடுகள் விற்பனையாளர்
மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 7493
உயர்தரமான தளபாட விநியோகஸ்தர்கள்
ஹூட்ஸன்ஸ்
38. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 7700

**பொங்கல் கதை**

# பொங்கிவருகின்ற புதுவெள்ளம்

கிழக்கு வானத்திலே ஒளி மலர் விரியத்தொடங்கிவிட்டது. கதிரவனின் வரவுக்கு சேவல் வரவேற்புப்பா பாடிக்கொண்டிருந்தது. கூடுவிட்டுப் பறக்கும் புள்ளினங்களின் ஆரவாரங்கள் - சந்தியடி ஆலமரத்தில் காகங்களின் கரைவு. உதயகீதங்கள் சூழலையே கலகலப்பாக்கிவிட்டிருந்தன.

விடிந்துவிட்டது.

உழைப்பாளர் கூடிக்குதூகலிக்கும் நாள் விடிந்துவிட்டது. பொங்கல். நினைக்கும்போதே உள்ளத்திலே புத்துணர்வைப் பொங்கவைக்கும் திருநாள்.

சோம்பலை உதறிக்கொண்டு எழும்பும்போது கையோடு பாயையும் சுருட்டிக்கொள்கிறுள் முன்னுல் அவன் மனைவி. ஆச்சரியம் இதயக்குழிக்குள் சுழியிடுகிறது. அகல விரியும் கண்களால் அவளை அளவிடுகிறுன்

அவள் முகத்துக்கு எங்கேயிருந்துவந்தது இத்தனைகளை. இப்படி ஒரு குதூகலம். சோகத்தினை மனத்திலே மூளையோடவிட்டு அது செழித்து வளர்ந்து நிலைகொண்டிருந்த இந்த நாட்களிலே இன்று மட்டுமென்ன?

உள்ளத்திலே வன்னிசாக பொங்கிப்படைத்துவிட எப்படியோ வயிற்றை இறுக்கிப் பிடித்து ஒழுங்கு செய்துவிட்டவள் விடியுமுன் எழுந்து பொங்கலுக்கு ஆயத்தம் செய்துவிட்டு கணவனை எழுப்ப வந்தபோதுதான்... அவனுக்கு உலகம் விடிந்தது. தன் முகத்திலே வரவழைத்துவிட்ட மகிழ்ச்சியை அவன் மனதிலும் ஏற்படுத்திவிட முனைகிறுள். முற்றத்துக்கு அழைத்து வருகிறுள்.

பொங்கல் அடுப்பு ஆயத்தமாக இருக்கிறது. பானையை ஏற்றவேண்டும். மனதிலே ஏறிவிட்ட ஏக்கச்சுமை அவனுள் கனக்கிறது ஏதோ இயந்திரமாக...ஆயிற்று. பரந்து சுடர்விடும் அடுப்புக்கு முன்னுல் அமர்ந்திருக்கிறுன். சீறிச் சுழித்து தீ எரிகிறது. அவனது பெருமூச்சாலா? பெருமூச்சா அது...மனப்புயல். திருநாளும் அதுவுமாய் அவனது நெஞ்சிலே புயலா...?

புயல்தான்!

இரண்டு மாதங்களுக்கு முன்னுல் அவனது மண்ணிலே வெறிகொண்டு சீறிய புயல் அவன் மனதிலே நிரந்தரமாகிவிட்டது. ஏக்கத்தோடு நிமிர்ந்தவன் கண்ணிலே முற்றந்தில் குறுக்கும் மறுக்குமாகக் கிடக்கும் தென்னை மரங்கள். அந்த மரங்களே அவனது வாழ்க்கைத் தூண்கள் போல் எவ்வளவு கை கொடுத்தன இன்று...

மாய்ந்துவிட்டதால் பணம் தான் கிடைக்காவிட்டாலும் தனது என்று பால் பிழிவதற்குத் தேங்காய் கூட இல்லையே...கனத்துப்போன கண்களை இடதுபுறம் திருப்புகிறுன். சுளகிலே சிதறிக் கிடக்கிறது அரிசி.

'ம் மனம் குமைகிறது.முன்பென்றல்...தனது மண்ணின் மடியிலே விளைந்த நெல்மணிகள் மூடை மூடையாக வீட்டுக்குள் அடுக்கியிருக்கும். பூரிப்போடு அதைப் பார்த்துப் பார்த்தே பொழுது கழிந்துவிடும். அந்த நிறைவிலே வருகின்ற பொங்கல்... இனிக்கின்ற பொங்கல்.

அந்த இன்பத்தைத்தான் புயலும் வெள்ளமும் வாரிச் சென்றுவிட்டதே...அன்று வந்த புயல் வீட்டை இடித்து கூரையை வாரிச்சென்றுவிட்டது. தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய்விட்டது என்று மகிழ்வடைய அவனுக்குப் பலமில்லை. பாய்ந்துவந்த வெள்ளம்தான் அவனது பயிர் பச்சைகளை அழித்துச் சென்றுவிட்டதே. தலை கூட ஏன் மிஞ்சியது என்றுதான் அவன் வாயிலும் வயிற்றிலும் அடித்தான். வருடம் முழுவதும் என்று கனவு கண்டு காத்திருந்த பயிர் அழிந்துவிட வாழ்வே எதற்கு என்று கலங்கினுன்.

வெள்ளம் வடிந்தது. துயர மேகம் நீங்க கதிரவன் ஒளி முகம் காட்டுவதுபோல் அவன் மனதிலும் மகிழ்ச்சிக்கோலம். பட்டினிகிடந்தாலும் பயிரை மீண்டும் பதிக்கலாமென்று எப்படியோ அலைமோதி மீண்டும் பயிர்வளர்த்தான். விதியோடு போராட முடியுமா? அது என்றே முடிவு செய்துவிட்டதுபோலும். சில நாட்கள் இடைவிட்டு மீண்டும் வெள்ளம்.

அடிபட்டு எழுந்தவன் மீண்டும் அலங்க முழங்க வீழ்ந்தான். விளைவு? மனம்கலங்கிச் சோர்ந்துவிட்டான். இன்பத்தின் நிழலே பட்டு அறியாதவன் போல் துன்பத்தோடு உறவுகொண்டுவிட்டான். மனைவியின் முகத்திலே அவனது மனதின் வெளிப்பாடு.

எப்போதும் தொங்க வைத்து சுருங்கிக்கிடந்த அவளது முகமலர் இன்று மட்டும் மலர்ந்து விரிந்தது...

அவன் மனைவியையும் சுளகிற்குள் சிதறிக்கிடக்கும் அரிசியையும் மாறி மாறிப் பார்க்கிறுன் வருடா வருடம் சுளகிலே நிறைந்து கிடக்கும் தனது வியர்வையில் விளைந்த அரிசி...ம்...இந்த வருடம்.

அவனது உள்ளம் வேதனையில் விம்முகிறது. வெடித்துவிடுமோ? இடிந்து கிடக்கும் வீட்டைப் பார்த்தவன் தற்காலிகமாக அமைத்த குடிசையைநோக்கிக் காலெடுத்து வைத்தபடியே கேட்கிறுன். 'இந்த நிலையிலும் நமக்கு இதெல்லாம் தேவையா.'

'ஏன் இப்படிச் சொல்லிறீங்க...நமக்கென்றே வாற திருநாளைக் கொண்டாடாமல்....

அவன் சிரிக்கிறுன். விரக்தியின் விளைவு.

'நம்மட மண்ணிலை விளையாதபோது...இதைப் படைக்கிறதாலை...'

இப்போது அவள் சிரித்தாள். தெளிவின் விளைவு.

மண்ணிலை விளையவைத்த அதே இயற்கைதானே பறித்துக்கொண்டு போனதும்... அதற்காகக் கவலைப்பட்டுப் பெருநாளுக்கே துக்கம்கொண்டாடுகிறதா?...நான் இப்ப தெளிஞ்சிட்டன் இனிக் கவலையே படுகிறதில்லை.

அவனுக்கும் தெளிவு. தந்த இயற்கையே பறித்ததற்காக கவலைப்படலாமா? மீண்டும் தரப்போவதும் அதுதானே. துயர் கலைந்த மனத்தோடு கிழக்கு வான்வெளியில் முகம் காட்டும் ஆதவனைப் பார்க்கிறுன். இப்போது அவன் மனதிலே பொங்கி வந்தது புதுவெள்ளம். அவனது வாழ்வைச் சிதைக்கப் புயலோடு வந்த வெள்ளமல்ல. இது இன்பவெள்ளம்.

பானையில் மட்டும் பொங்கவில்லை. மனதிலும் இன்பம் பொங்கியது

(யாவும் கற்பனை)

-- காவலூரான் --

## சங்கீதம்

மேமன்கவி

மனக் கருப்பையைக்
கிழித்து
இதயத்தை உருக்கும்
இனிய நாதம்!

நரம்பு மண்டலம்
அதிர்வுக் காண
நாதப் பிளம்பிலே
எரியும் மனம்!

செவியின் தாபம்
இசையோ தீர்க்க
புவியோ சுழல...
இன்பப் புன்னகை
புரியும் இதயம்!

கணங்கள்
கரைய-கரைய
மனமோ துள்ளும்
ராகம். உருகி
தாளம் அடங்கிப்
போன நிலையிலே-

ஏக்க சமாதி
காணும் ஆன்மா!


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
**தைப்பொங்கல் வாழ்த்துக்கள்**

**வெளிநாடு செல்ல யோசனையா?**

உங்கள் பாஸ்போட், விசா, பிரயாணத்திற்குரிய அனுமதிப் பத்திரங்கள் உடனுக்குடன், எம்மால் பெற்றுக்கொடுக்கப்படும்.

தொடர்புகொள்க!

**கிறீன்பீல்ட் ரவல் ஒப்பறேற்ரேஸ்**
(GREENFIELD TRAVEL OPERATERS)
26, நவீனசந்தை (மேல் மாடி)
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7875



அனைவருக்கும் அன்புகலந்த
**பொங்கல் வாழ்த்துக்கள்**

உங்களுக்குத் தேவையான

பாட்டா - சின்வா - டி. ஐ. - எலெஸ்ரே
மற்றும்
நவீன பாதணி வகைகட்கும்

அழகுக்கு அழகு செய்யும் அழகு சாதனப் பொருட்கள்
வர்ணயால வனப்புறு றேந்தைகள்
யாவற்றையும்

யாழ்.நகரில்மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள

**இன்றே விஜயம் செய்யுங்கள்**

**நாதன்ஸ்** 17, நவீனசந்தை,
யாழ்ப்பாணம் – போன்: 7540



வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது இதயங்கனிந்த
**பொங்கல் வாழ்த்துக்கள்!**
யாழ். நகரில் எதுவேண்டுமோ
அதை சிரமமின்றிப் பெறலாம்.
இது உங்கள் நிறுவனம்



**சி. சின்னத்துரை & பிறதர்,**
39, கே. கே. எஸ் வீதி - யாழ்ப்பாணம்.
போன்: 284



வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய
**பொங்கல் வாழ்த்துக்கள்!**
தொழில்நுட்ப நிர்மாண, திருத்த வேலைகளுக்கு,
வட இலங்கையில் நற்பெயர் பெற்ற ஸ்தாபனம்

PEC

**புரேமோட்டர்ஸ் என்ஜினியறிங் கொம்பனி லிமிட்.,**
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர் - யாழ்ப்பாணம்.

சர்வகலாசாலைக் கல்வி சம்பந்தமான பிரச்னைகள் - 6

# சர்வகலாசாலைப் பரீட்சைகளும் மொழி அடிப்படையில் தரப்படுத்தலும்

இலங்கைச் சர்வகலாசாலை கொழும்பிலிருந்து இயங்கி வரும் வரைக்கும் சூழ்நிலை சுமுகமாயிருந்ததைக் கவனித்தோம். சர்வகலாசாலை பேராதனைக்கு மாற்றப்பட்ட காலந் தொடங்கி இனத் துவேஷம் வளர்ந்து வந்ததையும் கண்டோம். இதற்குரிய காரணங்களையும் குறிப்பிட்டிருந்தோம். முக்கிய காரணம் அரசியலில் ஏற்பட்ட மாற்றமாகும். 1956ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலை எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா இன, மத அடிப்படையில் நடத்தினார். பௌத்த கமிஷன் அறிக்கை பிரசாரத்திற்குத் தீவிரமாக உபயோகிக்கப்பட்டது. இந்த அறிக்கை, இலங்கையில் பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்களவர் பெரும்பான்மையாக இலங்கையிலிருந்தபோதிலும் அவர்களுக்கு முப்படைகளிலும், அரசாங்க சேவையிலும், கல்வித்துறையிலும் போதிய இடம் கிடைக்கவில்லையெனச் சுட்டிக்காட்டியுள்ளது. பண்டாரநாயக்கா அரசாங்கம் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தது சர்வகலாசாலையையும் பாதித்தது. பேராசிரியர் மயில்வாகனம் பேராதனைச் சூழ்நிலை தமிழர்களுக்குப் பாதகமாயிருந்ததை எடுத்துக் காட்டியுள்ளார். இக்காலத்தில்தான் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் தோன்றியது.

இலங்கைச் சர்வகலாசாலை கொழும்பில் இயங்கிவந்த காலத்தில் பரீட்சைகளில் யாருக்கேனும் சலுகை காட்டியதாகக் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் இப்பொழுது உபவேந்தர் சிறிவர்த்தன, மத்தியு மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த சத்தியக்கடுதாசியில், பேராசிரியர் குலசேகரம், பேராசிரியர் மயில்வாகனம், பேராசிரியர் கந்தையா போன்றவர்கள் தமிழர்களுக்குச் சலுகை காட்டியதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். இரசாயன இயல் பேராசிரியர் பதவிக்கு சிறிவர்த்தனவும், தமிழரான டாக்டர் தேவானந்தனும் போட்டியிட்டபொழுது பேராசிரியர் மயில்வாகனத்தின் ஆதரவினாலேயே சிறிவர்த்தன பேராசிரியரானார். இப்படியிருந்தும் பேராசிரியர் மயில்வாகனம் தமிழர்களுக்குச் சலுகை காட்டினாரெனக் கூசாமல் சிறிவர்த்தன கூறியுள்ளார். [பாராளுமன்ற விவாதங்கள் [Hansard] தொகுதி-1 இலக்கம் 10.7.11 78 பக்கம் [491].

## கண்டிச் சிங்களவர் கிளர்ச்சி

1959ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட நீட்காம் கமிஷன் முன் தமிழ் மாணவர்களுக்கு பரீட்சைகளில் சலுகைகள் காட்டப்பட்டதாகக் கூறப்பட்டதையும், அவர்கள் அதை ஏற்காததையும் குறிப்பிட்டிருந்தோம் ஆனால் போகப் போகத் தமிழ்மாணவர் நிலை மோசமாகிவந்தது, 1969ம் ஆண்டில் பொறியியல்துறைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவரில் சிங்களவரும் தமிழரும் சரிசமமாக இருந்தனர். 1970/71ம் ஆண்டில் பரீட்சை முடிவுகள்வெளிவந்ததும்மாணவருக்கு அனுமதிப்பத்திரங்களும் அனுப்பப்பட்டன. இப்பரீட்சையில் பொறியியல் துறையில் 100 தமிழ் மாணவரும் 50 சிங்கள மாணவரும் சித்திபெய்தினர். இதனைக் கண்ட கண்டிச் சிங்கள வாலிபர் முன்னணி இப்பரீட்சைப் பேறுகளை எதிர்த்துப் பிரசாரம் செய்தனர். இதனால் அரசாங்கம் இனக்கலவரங் கூடுமென அஞ்சியது. அரசாங்கம் மாணவர்களுக்கு அனுப்பிய அனுமதிப்பத்திரங்களை நிறுத்திவைத்தது. சிங்கள மக்களின் கிளர்ச்சியை நிறுத்துவதற்குச் சிங்கள மாணவரின் தொகையைப் பொறியியல்துறையிலும்வைத்தியத்துறையிலும் கூட்டுவதே வழியெனத் தீர்மானித்தது. இதற்குப் பொறியியல்துறை, வைத்தியத்துறையில் அனுமதிகோரும் சிங்கள மாணவரின் புள்ளிகளைக் குறைப்பதும், தமிழ்மாணவரின் புள்ளிகளைக் கூட்டுவதுமே வழியெனத் தீர்மானிக்கப்பட்டது பொறியியல்துறையில் அனுமதிக்கப்படும் சிங்கள மாணவரின் கூட்டுத்தொகை குறைந்தது 227 என்றும் தமிழ் மாணவரின் கூட்டுத்தொகை 250 என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி தமிழ்

ச. அம்பிகைபாகன்

மாணவர் 23 புள்ளிகள் கூடப் பெறவேண்டியிருந்தது. இப்படி மாற்றஞ்செய்யப்பட்டதால் அனுமதிபெறும் சிங்கள மாணவர் தொகை 50லிருந்து 89 ஆகக் கூடியது. தமிழ் மாணவர் தொகை 100லிருந்து [58 ஆகக்] குறைந்தது. இதுபோலவே வைத்தியப் பகுதியில் அனுமதிபெறும் சிங்கள மாணவர் தொகை 137 ஆகக் கூட்டப்பட்டுத் தமிழ் மாணவரின் தொகை 103ஆகக் குறைக்கப்பட்டது. வைத்தியத்துறைக்குச் சேரும் சிங்கள மாணவருக்குக் குறைந்த புள்ளி 229 என்றும் தமிழ் மாணவருக்கு 250 என்றும் மாற்றப்பட்டது. 1970/71 ஆண்டில் தரப்படுத்தலோ, பிரதேச அடிப்படை முறையோ கையாளப்படவில்லை. சிங்கள தமிழ் மாணவரில் எத்தனைபேர் அனுமதிக்கப்படவேண்டுமென்று தீர்மானித்துவிட்டு. அதற்கேற்ப புள்ளிகள் சரிப்படுத்தப்பட்டன (Adjust). இதனால் முதலில் அனுமதிப்பத்திரங்கள் பெற்ற தமிழ் மாணவர் பலர் ஏமாற்றமடைந்தனர், இச்சூழ்நிலையில்தான் தமிழ் இளைஞர் பேரவை ஆரம்பமானது.

முன்பு குறிப்பிடப்பட்ட கண்டி வாலிப முன்னணியினர் தமிழ் மாணவருக்கு 1970-ம் ஆண்டு நடைபெற்ற பொறியியல் பரீட்சையில் கூடிய புள்ளிகள் கொடுக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டினர். இக்குற்றச்சாட்டை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொறியியல் பேராசிரியர் ஓ. இ. பெரேரா தலைமையில் விசாரணைக்குழு உபவேந்தரால் நியமிக்கப்பட்டது. இவ்விசாரணைக்குழு தீவிர விசாரணை செய்து இக்குற்றச்சாட்டுக்கு ஓர் ஆதாரமுமில்லையெனத் தெரிவித்தது பின்னர் தமிழ் மாணவர்களுக்குச் செய்கை முறைப் பரீட்சையில் (Practial Examiaation) தமிழ் விரிவுரையாளர்கள் உதவிசெய்து வருகிறார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதையும் அவர்களால் நிரூபிக்கமுடியவில்லை ஆனால் 1971-ம் ஆண்டு தொடக்கம் செய்கைமுறைப் பரீட்சை நிறுத்தப்பட்டது.

## மொழிவாரித் தரப்படுத்தல்

1977/72-ல் என்னமுறை கையாளப்பட்டதென்று தெரியவில்லை. ஆனால் அவ்வாண்டில் எட்டுச் சிங்கள மாணவருக்கு ஒரு தமிழ் மாணவரென்ற முறையில் அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வாண்டிலும் தரப்படுத்தல் உபயோகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும், ஆனால் இதனை வெளிப்படையாகக் கூறவில்லை.

1973-ம் ஆண்டிலேயே வெளிப்படையாக அரசாங்கம் தரப்படுத்தலை உபயோகித்தது. 1970-ம் ஆண்டில் போல் இன அடிப்படையில் அனுமதி வழங்கப்படவில்லையென்பதைக் காட்டுவதற்காகவே தரப்படுத்தல் பிரதேச அடிப்படை முதலியன கையாளப்பட்டன. தரப்படுத்தல் எப்பொழுதுமே ஒரு பிரச்னைக்குரிய விஷயம். அதனைப் பரீட்சைகளில் உபயோகப்படுத்துவது பற்றி யுள்ளார்]

பிரதேச அடிப்படையில் அனுமதி செய்யும் முறை பெருந்தொகையான மாணவரை ஏ. எல். பரீட்சைக்கு அனுப்பும் மாவட்டங்களை அதிகம் பாதிக்கும். டாக்டர் சி ஆர். டி. சில்வா 1974-ம் ஆண்டில் வெளியிட்ட கணக்கின்படி பிரதேச அடிப்படையில் யாழ்ப்பாணத்திலிருந்து 37 மாணவருக்கு ஒரு மாணவரும் கொழும்பு நகரிலிருந்து 29 மாணவருக்கு ஒரு மாணவரும், காலியிலிருந்து 19 மாணவருக்கு ஒரு மாணவருமே அனுமதி பெறுவர். இதனால் தகுதியுள்ள மாணவர் அதிகம் பாதிக்கப்படுவர்.

மந்திரி சிறில் மத்யூ சமீபத்தில் புதிய சர்வகலாசாலைச் சட்டம் விரிவாக்கப்பட்ட போது ஒரு விஷமத்தனமான பேச்சைப் பேசினார். இது பற்றி பின்னர் கவனிப்போம். இந்தப் பேச்சின் பொழுது 1977-ம் ஆண்டு தரப்படுத்தல் நடைமுறையிலிருந்த பொழுது வெளிவந்த சர்வகலாசாலைப் பிரவேசப் பேறுகளையும் 1978-ம் ஆண்டு தரப்படுத்தல் நீக்கிய பின் வெளிவந்த பேறுகளையும் கொடுத்துள்ளார். அதிலிருந்து தரப்படுத்தலை எடுத்ததால் சிங்கள மாணவரை எவ்வளவு பாதித்துள்ளது என்பதைக் காட்டியுள்ளார். அவர் காட்டிய 1978-ம் ஆண்டு பேறுகளைக் கொண்டு தரப்படுத்தலையெடுத்தது தமிழ் மாணவர்களுக்கு எப்படி நன்மை செய்திருக்கிறதென்பதை நாம் அறியலாம்.

| கல்வித்துறை | போதனா மொழி | 1977 மாணவர் தொகை | 1977 விகிதாசாரம் | 1978 மாணவர் தொகை | 1978 விகிதாசாரம் |
|---|---|---|---|---|---|
| வைத்தியம் | சிங்களம் | 168 | 60% | 228 | 57% |
| | தமிழ் | 67 | 26% | 170 | 42 5% |
| பல்வைத்தியம் | சிங்களம் | 38 | 76% | 18 | 36% |
| | தமிழ் | 12 | 24% | 32 | 64% |
| மிருக வைத்தியம் | சிங்களம் | 19 | 63% | 14 | 49% |
| | தமிழ் | 11 | 37% | 15 | 50% |
| | ஆங்கிலம் | | | 1 | 3½% |
| பொறியியல் | சிங்களம் | 215 | 80% | 231 | 63% |
| | தமிழ் | 50 | 19% | 130 | 36% |
| | ஆங்கிலம் | 4 | 1% | 8 | 3½% |

நிபுணர்கள் அபிப்பிராயம் பலதன்மையாகவுள்ளது. ஆனால் இலங்கையில் கையாளப்படும் மொழிவாரித்தரப்படுத்தல் வேறெங்கும் கையாளப்படாத முறையாகும். மொழிவாரித் தரப்படுத்தல் தமிழ் மாணவரை எவ்வாறு பாதிக்கிறதென்பதை நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் 30-11-74-ல் வெளியிட்ட அறிக்கையில் நன்கு விளக்கி

1978-ம் ஆண்டில் தரப்படுத்தல் எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், தரப்படுத்தப்பட்டால் எவ்வளவு சிங்கள மாணவர் சேர்க்கப்படுவாரோ அவ்வளவு சிங்கள மாணவர் சேர்க்கப்பட்டனர் எனக் கூறப்படுகிறது இப்படிச் சிங்கள மாணவர் சேர்க்கப்பட்டதால் தகுதியான தமிழ் மாணவர் அனுமதி பெறாமல் இருந்திருக்கலாம்.

[11-ம் பக்கம் பார்க்க]

அனைவர்க்கும் எமது அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
இத்திருநாளில் உங்கள் இதயம் கவர்ந்த தங்க, வைர நகைகளைத் தெரிவுசெய்ய மறவாதீர்கள்
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன் : 7199 தந்தி : "வைரம்"

தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
யாழ். மெற்றல் உற்பத்திப் பொருட்களான
அலுமினிய, பித்தளைப்
பாத்திரங்கள்
லேக்கவுஸ் பத்திரிகைகள்
தென்னை அபிவிருத்திச் சபையாரால்
அங்கீகரிக்கப்பட்ட
பசளை விற்பனையாளர்கள்
யாழ்மெற்றல்
விற்பனை நிலையம்
Yarl Metal Sales Centre
6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
போன் : 7596

## தைப்பொங்கல்

உழுவோர் தினம் புவிமீதினில்
உதிக்கும் முதல் திருநாள்
வழுவாதிரு வழியே தொடர்
பொங்கல் எனும் திருநாள்.

மழையோ டுறை பனியின் குளிர்
படர் மார்கழி பெற்றே
இழையோடிடும் எழில் நூலென
உயர்வாகிய பொங்கல்

உழவோர் கரம் உயர்வாக்கிடும்
ஒரு நாள் தைமுதல்நாள்
உழவால் புவி சிறந்தோங்கிடும்
உணர்வேதரும் பொங்கல்

புலரும் கதிர் புலவில் விளை
கதிரில் விளையாட
மலரும் உள நிறைவில் மனம்
மகிழ்வேதரும் பொங்கல்

உழுவோ னெனும் படைப்பாளியின்
பணியில் உறு வெற்றி
பழுதே விளையாதே எனப்
பகரும் தைப்பொங்கல்.

-வளவன்

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

''குற்றப்பணம் கட்ட விருப்பமா... இல்லை... போலீசுக்குப் போகவிருப்பமா?'' சிவனேசன் வார்த்தைகளை அளந்து சொட்டினான்.

''டேய்! 'எக்ஸாமினர்' தமிழண்டா''- சிவனேசனுக்குப் பின்னால் அசரீரி ஒலித்தது.

அப்போது மாஸ்டர் சிவனேசனை நோக்கி, ''பாவம்! விட்டு விடும் அவனை- 'டிக்கெட்' எடுக்காமப் போறதால உமக்கு நஷ்டமில்லையே'' என்றார்.

சிவனேசனுக்குப் பற்றிக்கொண்டு வந்தது. ''கவர்ண்மெண்டுக்கு நஷ்டம் வராமல் தடுக்கிறதுதான் எங்கடமை. பெடியன் பாவம் என்கிறநீர் அவனுக்காகக் குற்றபணம் கட்டினால் என்ன?''

மாஸ்டர் சுற்றுமுற்றும் பார்த்தார். பிறகு அமைதியாக ஐம்பது சத நாணயம் ஒன்றை எடுத்து நீட்டினார். ''குற்றப் பணம் கட்டிறதால உமக்கு லாபம் ஒரு சதமுமில்லை. இதைப் பிடியும். 'றிசீற்' வேண்டாம். 'சிகரெட்' வாங்கிக் குடியும்'' என்றார்.

''எனக்கு லஞ்சம் வாங்கிப் பழக்கமில்லை'' - சிவனேசன் ...பத்தாட்டிக் ... கேளும்'' -மாஸ்டர்.

கம்பார்ட்மெண்ட் முழுவதும் ஒரே கேலிச்சிரிப்பு. விசில் அடித்தார்கள்.

சிவனேசனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ''ஆமியைக் கூப்பிடுவேன்'' என்றான்.

''ஹா... ஆமி... ஆமி...'' என்று பயத்தோடு சொல்வதுபோல் சொல்லிக்கொண்டு தன் இரண்டு கால்களையும் யன்னலுக்கு வெளியே நீட்டிக் கேலிச்சைகை செய்துவிட்டு, ''பயப்படுத்துகிறீராமிஸ்டர். என்னுடைய மாமா..'' என்று பிரபலமான ஒரு அரசியல்வாதியின் பெயரைச் சொன்னார் மாஸ்டர் பிறகு சிறுவனை இருக்கச் சொல்லிவிட்டு எங்கோ எழுந்துபோனார்.

சிவனேசன் சிறுவனின் கையைப்பிடித்து இழுத்துத் தன்னோடு வரும்படி சொன்னான். சிறுவனோ 'சீற்றை' அழுந்தப் பிடித்தபடி உட்கார்ந்திருந்தான்.

சொற்ப நேரத்தில் மாஸ்டர் திரும்பி வந்தார். 'டிக்கெட்' ஒன்றை நீட்டினார். 'இணுவில்'—பதினறு ரூபா அறுபது சதம்—கோட்டையில் எடுக்கப்பட்டது.

சிவனேசனுக்குப் பொறி தட்டியதுபோல் ஒரு எண்ணம் உதித்தது. 'டிக்கெட் செக்' பண்ணப்படாத ஒரு கம்பார்ட்மெண்டுக்குப் போய் அங்கு ஒரு 'டிக்கெட்டை' யாரிடமோ இரவல் வாங்கி வந்திருக்கிறார் இந்த மாஸ்டர். ரயில் பூரா 'செக்' பண்ணுவதற்குள் அடுத்த ஸ்டேஷன் வந்துவிடும். அங்கு ஒரு 'டிக்கெட்' வாங்கி தான் கடன் பட்டவரிடம் கொடுத்துவிடுவதுதான் மாஸ்டரின் திட்டம். நான் ஆரம்பத்திலேயே என் சகாக்களையோ ஆமியையோ கூப்பிட்டனுப்பாதது தப்பு என்று நினைத்தான்.

''இப்ப என்ன சொல்கிறீர் மிஸ்டர்? என்னை முட்டாள் என்று நினைத்தீர் போலும். நான் பி. எஸ்ஸி ஆனர்ஸ் 'பொட்னி' ஆசிரியர்; தெரியுமோ'' என்று இழுந்தார் மாஸ்டர் உடனே 'கொல்' லென்று நையாண்டிச் சிரிப்புச் சிரித்தார்கள் அந்த வாலிபப் பிரயாணிகள்.

'ஏன் இவர்கள் இப்படிக் கேலி செய்கிறார்கள். என்னை ஏன் எதிரிபோல நினைக்கிறார்கள், கடமையை நான் சர்வரச் செய்ததுச்சா இந்த நையாண்டி என்று நினைத்து அந்த இளம் டிக்கெட் எக்ஸாமினர்' ''நோ... நோ... இதோ பாரும் 'றிசீற்' கூடப் போட்டாயிற்று'' என்று தன் கையிலிருந்த 'புக்'கைக் காட்டினான்.

''ஓய்''! போங்காணும் 'டிக்கட்' தந்தாச்சுப் பிறகென்ன கதை'' என்று சொல்லிவிட்டு சிவநேசலைப் பிடித்துத் தள்ளிவிட்டான் ஒரு வாலிபன், மாஸ்டரின் சிஷ்யப்பிள்ளை.

சிவனேசன் அப்படியே அலாக்காக வாயில்புறத்தே போய் சாய்ந்தான். தள்ளுப்பட்ட வேகத்தில் சரிந்து ஓடும் ரயிலுக்கு வெளியே வீழ்ந்தான். அந்த ஒரு நிமிடத்தில் புன்னகையோடு வழி அனுப்பி வைத்த புதுமனைவி சுபாஷினி அடுத்த மாதம் கல்யாணமாகப் போகும் ஒரே தங்கை கௌரி. இருவரதும் முகங்கள் சிவநேசனின் மனதில் தோன்றியது. சிவனேசன் கீழே வீழ்ந்தான்.

ஒரு இளம் கடமை வீரனை எதிரிகாக நினைத்துக் கேலி செய்த அந்தப் பிரயாணிகளுக்கு அபாயச்சங்கிலியை இழுக்கவேண்டும் என்ற மனிதாபிமானம் தெரியவா போகிறது? 'நெவர்'

ரயில் நின்றால் சாட்சி அது இது என்று வந்து தமது நேரம் பாழாகிவிடும் என்று நினைப்பவர்கள் போலும் அவர்கள்.

கரிய இருள் நேரமாதலால் அடுத்தடுத்த கம்பார்ட்மென்டில் இருந்தவர்கள் சிவனேசன் கீழே வீழ்ந்ததைக் கவனிக்கவில்லை.

அந்த மெயில் ரயில் லயம் தவறாத ஓசையுடன் ஓடிக்கொண்டிருக்கிறது.

[யாவும் கற்பனை]

## துணிவு வேண்டும்

உங்களை ஒருவர் முட்டித்தள்ளினால் நீங்களும் திருப்பித் தள்ளவா தீர்கள். திருப்பித் தாக்காமலிருப்பதற்கான துணிவு வேண்டும் நமக்கு.

—மார்டின் லூதர் கிங்

## மாணவர்எண்ணம்

இடநெருக்கடி காரணமாக இவ்வாரம் மணவர் எண்ணம் இடம்பெறவில்லை. மாணவ மணிகளுக்கு எமது பொங்கல் வாழ்த்துக்கள்

-கண்டோஸ்

உழவர் திருநாளாம் இப்பொங்கல் பெருநாளில் எமது
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்பு கலந்த

**பொங்கல் வாழ்த்துக்கள்**

விவசாயிகளே!
உங்களுக்கு வேண்டிய

★ **விவசாய மருந்து வகைகள்**

★ **கால்நடைதீன் வகைகள்**

குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**லிங்கம் ஸ்ரோர்ஸ்**

168, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7576

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அன்புகலந்த

**பொங்கல் வாழ்த்துக்கள்!**

இலங்கை மட்பாண்டக் (செரமிக்) கூட்டுத்தாபன தயாரிப்புகளான

☆ குளியல் அறைக்கு பதிக்கும் மாபிள் கல்லுகள் (பல வர்ணங்களில்)

☆ வீட்டுப்பாவனைக்குரிய பீங்கான் கோப்பை வகைகள், கப் அன் ஸோசர்

மற்றும்

மாபிள் வாஷ் பேசின், சிங் வகைகளுக்கு
யாழ். நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்

வி மா கி (வி. ம. கி.) VEMAKE V. M. K.

திருமண வைபவமா? பிறந்தநாள் விழாவா??

உங்களுக்கு வேண்டியவர்களுக்கு சிறந்த அன்பளிப்பு வழங்க வேண்டுமென்பதுதானே நோக்கம்
ஒருமுறை ''வி மா கி''க்கு விஜயம் செய்தால் பின் என்றென்றைக்கும் நினைவில் தங்கும் நிறுவனம் ''வி மா கி''யே.

கோழிமுட்டைகள் மொத்தமாக வாங்கவும், விற்கவும் நம்பிக்கையான ஸ்தாபனம்

**வி மா கி VEMAKE**

27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்நிலையம் முன்)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இனிய

**பொங்கல் நல்வாழ்த்துக்கள்!**

விவசாயிகளின் நண்பன் நீரிறைக்கும் இயந்திரங்கள்.
நேர்த்தியான நீண்டபாவனைக்குரிய பல நீரிறைக்கும்
பம்புகளின் வடமாகாண விநியோகஸ்தர்களான எம்மிடம்

★ றெபின் ★ சிங்கா ★ வில்லியர்ஸ் இயந்திரங்கள்

சென்றிக் பம்புகளுடன் இணைக்கப்பட்டு விற்பனைக்குவந்துள்ளன.
சகல உதிரிப்பாகங்களும் எம்மிடம் விற்பனைக்குண்டு,

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:

★ **ஜெம் மோட்டார்கள்**

**ஏழைகளின் தோழன்**
**உங்கள் அபிமான றலி**

பைசிக்கிள்கள்...இங்கிலிஷ் உதிரிப்பாகங்களுடன் இறக்குமதி செய்து விற்பனை செய்கின்றோம்....
இறக்குமதி செய்யப்பட்ட மின்சார உபகரணங்கள் ... எஸ்-லோன் இணைப்புகள் அனைத்துக்கும்...

**நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்**

141 — 143 ஸ்ரான்லி வீதி, (தொலைபேசி: 7016) யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எமது அன்புகலந்த

## பொங்கல் வாழ்த்துக்கள்

நீங்கள் எப்போது வருமென எதிர்பார்த்திருந்த

**டெலிவிஷன்**

இதோ எமது காட்சி அறைக்கு வந்துவிட்டது
யாழ்.நகரில் முதலாவதாக 24 அங்குல திரை அளவுள்ள டெலிவிஷனை அறிமுகப்படுத்துவதில் பெருமை அடைகிறோம்.

யாழ்.மாவட்டத்துக்கு நாமே உத்தரவுபெற்ற

**பிலிப்ஸ் விற்பனையாளர்கள்**

உங்களுக்கு வேண்டிய சகலவிதமான
றேடியோ, டேப்றெக்கோட், டெலிவிஷன்
இவைகளை விசேஷ கழிவுடன் பெற்றுக்கொள்ள

**S. சுலைமான்கண்டு & பிறதர்**

5-7, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

---

## பொங்கல்கண்டு உய்வோம்

மனைசிறக்க மங்கலங்கள் விருந்துதர,
புனைஅழகு புரிமகளின் வாழ்வுவர,
நினைவிருக்க நிறைவல்கள் புதிதுதர
அனைவரும்நாம் தைப்பொங்கல் கண்டுய்வோமே

மேலைப்புலோலி --மு. சு கதிர்காமத்தம்பி

---

வாடிக்கையாளர்கள். அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் இதயம் கலந்த

## பொங்கல் வாழ்த்துக்கள்

25 வருடங்களாக யாழ். நகர் வர்த்தக பெருமக்களின் நன்மதிப்பைப் பெற்று புதுப் பொலிவுடன் திகழ்கிறது
பலசரக்கு பாவனைப் பொருட்கள்
அன்றாடத் தேவைகள் அனைத்துக்கும்
ஒரே ஸ்தாபனம்

**ஆ. க. கனகசபாபதி சன்ஸ்**

106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
போன்: 457. தந்தி: மாஸ்டர்

---

உங்கள் அனைவருக்கும் எமது தித்திக்கும்

## பொங்கல் வாழ்த்துக்கள்!

உங்கள் பிரச்னை என்ன?

★ பாடல்கள் பதிவுசெய்ய (றெக்கோடிங்) வேண்டுமா?

★ வானொலி திருத்த அல்லது வாங்கவேண்டுமா?

★ இன்று பிரபலமாக விளங்கும் அழகிய, தரமுள்ள சீக்கோ, சிற்றிசன், மொண்டியா கைக்கடிகாரங்கள் வாங்கவேண்டுமா?

எங்களை நாடுங்கள்!

**சகல எலக்ரோனிக் பொருள்களும்**
எம்மிடமுண்டு.

(வேலைத்தலம் மேல் மாடியில் (இல: 1) உண்டு)

# ஈறோ எலக்ரோனிக்ஸ்

(ERO ELECTRONICS)

23, நவீன சந்தை -- யாழ்ப்பாணம்

---

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
அன்பர்கள் அனைவருக்கும் இனிய

## பொங்கல் வாழ்த்துக்கள்

உங்கள் இல்லங்களில் இனிய நாதம் ஒலிக்க,
பல்வகை றேடியோக்களை நாமே
இறக்குமதிசெய்து விற்பனைசெய்கிறோம்
நஷனல் பன்சோனிக், பிலிப்ஸ். சன்யோ,
அக்காய், கொனியன் றேடியோக்கள்
கசெற்றுக்கள், உள்ளூர் உற்பத்தியான
யுனிக், சிசிரு, எலைற் றேடியோக்கள்,
விளையாட்டுச்சாமான்கள், றேடியோ
உபஉறுப்புக்கள்.

**வி. கே. ராஜரட்ணம்**

95/3, ஸ்ரான்லிவீதி. யாழ்ப்பாணம்.
போன்: 7447

---

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது

## பொங்கல் வாழ்த்துக்கள்!

விவசாயிகளுக்குத் தேவையான

- சகல விவசாய, இரசாயனப் பொருட்கள், கிருமிநாசினிகள், உரவகைகள்
- மளிகைச் சாமான்கள்
- வீட்டுப் பாவனைப் பொருட்கள்
- அலங்காரப் பொருட்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- பாட்டா பாதணிகள்

மற்றும்

குடும்பப் பெண்களின் உற்ற நண்பனும், சுத்தம் சுகாதாரத்திற்கேற்ற நேரம், பணம் ஆகியவற்றை மீதப்படுத்த உதவும்

# எல். பி. காஸ்

அடுப்புகள்

இன்னும் உங்களுக்கு வேண்டிய அத்தனை பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

# எஸ். பி. சாமி அன் கோ.

193, மின்சாரநிலைய வீதி, — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7025

தலைமை அலுவலகம்:
72, 4-ம் குறுக்குத்தெரு — கொழும்பு-12
போன்: 22640

---

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள்
அனைவருக்கும் இனிய

## பொங்கல் வாழ்த்துக்கள்!

எண்ணம்போல்
வர்ணஆடை
களுடன் உங்கள்
தோற்றம்
மெருகூட்ட
நாடுங்கள்

பெல்ஸ், ஜீன்ஸ்,
பொலியஸ்டர்,
கிரிம்லிம்,
பட்டுப்பருத்தி
ஆடைகளுக்கு
நகரின்
எழிற்கூடம்...



**த. குமாரசாமி றெக்ஸ்ரைல்ஸ்**

42, 44, பெரியகடை -- யாழ்ப்பாணம்
தந்தி: குமாரசாமி, போன்: 7034

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

**REGAL** (Jaffna) NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p m,
Grand Pongal Release
TONY CURTIS, ROGER MOORE in
**Mission Monte Carlo**
Spy Film (Color)

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்
தித்திக்கும் தைப்பொங்கல்திரைவிருந்து
**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஆனந்தன், குமாரிசச்சு, அசோகன் ஈ. வி. சரோஜா
**வீரத்திருமகன்** (புதிய பிரதி)
வெத்திலேபோட்ட பத்திவிப்பொண்ணு சுத்துதுமுன்னாலே

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்
4-வது ஜனத்திரள் வாரம்
**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா
மற்றும் பலர் நடித்த
**உயர்ந்தவர்கள்**

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சமித்ரா
**லலிதா**

**லிடோ** போன்: 7698 தினசரி 4காட்சிகள்
(யாழ்.நகர்) விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
**ஆசை அறுபதுநாள்**

## என்ன...

(6-ம் பக்கத் தொடர்ச்சி

பிரசித்தியான பெருவாழ்வும் வெற்றியும்- செல்வாக்கும் கிட்டும் எனினும் பெண்களினால் பலவித கஷ்டங்களும், உறவினர்களிடையே சச்சரவுகளும் விரோதங்களும் ஏற்படக்கூடும். குடும்பவாழ்க்கையும் சிலருக்குத் திருப்தியற்றதாகவேயிருக்கும். செல்வமிருந்தாலும் சிலருக்குச் சுகம் இருக்காது- ஆண்டின் பிற்பகுதி சிலருக்குப் பெருநட்டமும் தொட்டதெல்லாம் தோல்வியாகவும் அமையும். கொண்ட கொள்கைகள் மறையக்கூடும். பணம் பதவிக்கும் சிரமப்படநேரிடும்.

## சர்வகலா...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தரப்படுத்தல் நடைமுறையிலிருந்த காலத்தில் (1970-77) தமிழ் மாணவர் பட்ட கஷ்டம் சொல்லமுடியாது. இக்காலத்தில் செலாவணிக் கட்டுப்பாடும் கடுமையாகவிருந்தபடியால், தமிழ் மாணவர் வெளிநாடுகளில் போய்க் கல்வி கற்கமுடியாமலிருந்தது இதனால் அவர்கள் பெரும் விரக்தியடைந்த நிலையிலிருந்தனர், இதுபோன்ற முன்னைய அரசாங்கத்தின் செயல்களே தனித்தமிழ் நாட்டுக்கொள்கைக்கு வித்திட்டதெனலாம். இக்கொள்கைக்கு இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழ் இளைஞரே பேராதரவு கொடுத்துவருகின்றனர்.

[வளரும்]

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்
**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
கமலஹாசன் — ஆலம்
**மன்மதலீலை**

## கலையும்...

6-ம் பக்கத் தொடர்ச்சி)

உபநிஷத் ஒன்று கூறுகிறது "உயிரூட்டும் சூரியனே படைப்புக் கடவுளிடம் இருந்து எழும் ஊற்றே மேலுலகம் முழுவதையும் நோக்கும் ஒப்பற்ற தேவனே உன்னுடைய பிரகாசத்தை எங்கும் வீசி குருடாக்கும் பேரொளியைச் சுருக்கிக்கொள் அப்போதுநான் உன்பிரகாசத்தின் ஊடாக உன்னுள் இருக்கும் பொருளைக்கண்டு அதை என் ஆன்மாவில் காணவிரும்புகிறேன் என்னும் கூற்றும் நோக்கத்தக்கது. பகவக் கீதையில் கடவுள் கண்களின் பார்வையில் அடங்கக் கூடியவராவும், எல்லாவற்றிலும் கலந்தவராகவும் இருக்கிறார் என்னும் கருத்தில் "ஓகுந்தி மகனே! நீரின் ரஸம் நானே சூரியர் சந்திரர்களது ஒளியும் வேதங்கள், அதிலுள்ள ஓசை. மனிதரில் உள்ள வீரம், உலகில் உள்ள நறுமணம், நெருப்பின் ஒளி எல்லாம் யானே" எனக்கூறப்பட்டது தற்காலத்திய இந்துக்களான ஸ்ரீஇராம கிருஷ்ணர், இரவீந்திரநாத் போன்றோர் இம்மாதிரியான கொள்கைகளை உடையவர்கள். "எங்கே ஒரு நிறம் உண்டோ ஒரு பாட்டு உண்டோ, ஒரு கருணை உண்டோ அங்கே சமயத் தொடர்பாகவும், கலை தொடர்பாகவும் எங்கட்கு அழைப்பு விடப்படுகிறது" என இரவீந்திரர் கூறுகிறார்.

இந்து சமயங்களின் கலாரசனைகள் ஆலயங்களின் சிற்பங்களிலும், பிரார்த்தனைகளிலும், சங்கீதம், நடனம், கவிதை, ஓவியம் ஆகியவற்லும், விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இந்துசமயம் கலாரசனையில் சிறந்து விளங்குகின்றது. அது கம்போடியா, யாவா, தென்கிழக்காசியாவின் பகுதிகளிலும் பரவியுள்ளது. கலையும் சமயமும் பொய்யற்ற காட்சிகளுடன் கலந்திருப்பது வாழ்க்கையில் நிரம்பிய மகிழ்ச்சியைத்தரும். இவை இரண்டினதும் புகழ் பெற்ற வரலாறாகவே காணப்படுகிறது. ஐரோப்பாவில் கிறிஸ்தவ சமயத்தைப் போல இந்தியாவில் இந்துசமயத்திற்கும் இது பொருந்தும்.

பல நூற்றாண்டு காலமாக கலையும் சமயமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. எனவே ஒன்றை அறிந்து கொள்ள வேண்டுமென்றால் மற்றதையும் அறிதல் அவசியம். பண்டைய மனிதரையும் இன்றைய மனிதரையும் அறிந்து கொள்ள பரந்த கலை மதத்தத்துவங்களையும் அறிதல் வேண்டும். அவை தங்களுக்குள் வேறுபாடுகள் கொண்டிருந்தாலும் மனித சம்பந்தமான மதிப்பீட்டில் கலையும் மதமும் சமமாகப் பரந்து தொடர்புடையனவாக இருக்கின்றன.

## எம். ஜி. ஆர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியை, அவர் குரலிலேயே இங்கு கேட்கலாம் என்றும் ஜீப்பில் பொருத்தப்பட்டிருந்த ஸ்பீக்கர் கூறியது.

அப்பொழுதும் அங்கு அமைதி நிலவியது. எம். ஜி. ஆர். வரவில்லையே என்ற ஏமாற்றத்தை மக்கள் பெரிது படுத்தவில்லை. பொறுமையாக நின்றார்கள். ஆனால் என்ன நடந்தது தெரியுமா?

ஜீப்பில் பொருத்தப்பட்டிருந்த எம். ஜி. ஆரின் (கட் அவுட்) படத்திற்கு, பெண்கள் ஆரத்தி எடுக்கத் தொடங்கிவிட்டனர்! இது மட்டுமல்ல,

அந்தப் படத்தை நோக்கி மலர் மாலைகள் வீசப்பட்டன. (அவை ஜீப்பிற்குள் விழுந்தன) படத்துக்கு முன் ஆரத்தி காட்டியதுடன் தேங்காய்களும் உடைக்கப்பட்டன! சந்தனம், குங்குமம் பூசப்பட்டன.


இவை எல்லாம் முன்னேற்பாடாகக் கொண்டு வரப்பட்டவை தான். ஆனாலும் எம். ஜி. ஆர் வரும் வழியில் அவருக்கு மாலைகள் போடவும், ஆரத்தி காட்டவும், தேங்காய்கள் உடைக்கவும் மக்கள் தயாராக இருந்ததும்; எம். ஜி ஆர். வரவில்லை என்றதும் அவரது படத்துக்கு இந்த மரியாதை அளிக்கப்பட்டதும் எனக்குப் பின்னர்தான் புரிந்தது! இது மட்டுமல்ல; அந்தப்படத்தைப் பார்த்துக் கையெடுத்து கும்பிட்ட தாய்மார்களையும் நான் கண்டேன்!

(12-ம் பக்கம் பார்க்க)

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்
**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
கமலஹாசன் - ஜெய்சித்ரா
**சத்யம்**

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்.
**ராணி** (யாழ்ப்பாணம்) பொங்கல் வெளியீடு!
தமிழக முதலமைச்சர்
எம். ஜி ஆர். - அஞ்சலிதேவி - பி. எஸ். வீரப்பா
என். எஸ். கிருஷ்ணன் - டி. ஏ. மதுரம்
மற்றும் பலர் நடித்த
**சக்கரவர்த்தித் திருமகள்**
(புத்தம் புதிய பிரதி)

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்
4-வது ஜனத்திரள் வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 4 காட்சிகள்
பைலட் **பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமதுஉளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்.
**ராஜா** (யாழ். நகர்)
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ரசிகர்களின் பாராட்டுப்பெற்ற ஒரே திரைவிருந்து!
தினசரி 4 காட்சிகள்
'வியட்னும்வீடு' புகழ் சுந்தரத்தின் கைவண்ணம்
★ விஜயகுமார்
★ ஜெயசித்ரா
★ நாகேஷ்
★ ஸ்ரீகாந்த்
★ மேஜர் சுந்தரராஜன்
நடித்த

**பயணம்**
மனிதன் நினைப்பவை யாவும் நடப்பதில்லை. நிலையற்ற மனித வாழ்வில் ஏது நிம்மதி? வாழ்க்கைப் பாதையில் பள்ளமும், திட்டியும் காணும் "பயணம்" இது எவருக்கும் சொந்தமல்ல. தெய்வத்தின் முடிவு...

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்
**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி
கமலஹாசன்—வை. விஜயா
**மூன்று முடிச்சு**

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்
பொங்கல் வெளியீடு!
**Rio** (Jaffna) Daily 4 Shows Phone: 7607
**POLICE PHYTHON 357**
அவளோ ஏமாற்றுக்காரி!
அவனோ சுறுசுறுப்பான உளவாளி!!
ஆனால், அவனால்.......?

எமது வாடிக்கையாளர்கட்கும், ஆதரவாளர்கட்கும்


எமது பொங்கல் வாழ்த்துக்கள்

பிஎம்சி 6 சிலிண்டர் டீசல் என்ஜின், கியர்பொக்ஸ்

எமது ஸ்தாபனத்தின் அதிபரினுல் நேரடியாக இங்கிலாந்தில் பரிசீலனைசெய்த, சீர்திருத்தப் பட்ட பி. எம். சி. 5 றொன் டீசல் என்ஜின் கியர்பொக்சுடன், தனி கியர்பொக்ஸ், கொழும் புத்துறைமுகத்தில் இறக்குமதியாகின்றன.
தேவையானோர் தமது பெயர் விபரங்களை எம்மிடம்பதிவு செய்யவும்.
முற்பணம் தேவையில்லை.

துரை

ஆர்;ஜி பில்டிங்ஸ்- 66 ஸ்ரான்லிறோட்
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7750
1308



## புதிய வாழ்வும் பொங்கிவரும்

எங்கள் கிராமம் எழிலோடு
இலங்கக் காண்பீர் வளமோடு,
அங்கே எமது வீட்டோடு
அணித்தாய் யாவும் வயற்காடு
தங்கும் தமிழர் பண்பாடு
தழைத்து ஓங்கும் செழிப்போடு
வயலை உழுது பண்படுத்தி
வடிகால் அமைத்து நீர்ப்பாய்ச்சி
அயரா துழைத்துப் பாடுபட்டு
அடைவோம் வாழ்வில் மேம்பாடு

பயிரும் செழித்து வளர்ந்துவர
பலனும் சிறப்பாய் அமைந்துவிடும்
எங்கும் இனிமை எழில் கூடும்
எவர்க்கும் துன்பம் நெருங்காது
கங்குல் வாழ்வில் கரைந்துவிடும்
காதல் மனங்கள் ஒன்றுபடும்
பொங்கல் வந்து பொலிவுதரும்
புதிய வாழ்வும் பொங்கிவரும்

- வர்ணம்

வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும் எமது மகிழ்ச்சிகரமான
பொங்கல் வாழ்த்துக்கள்
"தை பிறந்தால் வழிபிறக்கும்"
இதோ உங்கள் உழைப்பின் செல்வத்தை சிரமமின்றி பெருக்க சுலபமானவழி...
உங்கள் பணத்துக்கு அதிக வட்டியும் - அதிக பாதுகாப்பும்பெற- நம்பிக்கையும், நாணயமும் மிக்க எம்மிடம் முதலீடுசெய்யுங்கள்

ரூபா 10,000/- இரண்டே வருடங்களில்
ரூபா 14,800/- ஆகப்பெருகிவிடும்.

24% இருவருட வைப்புக்கு-வட்டி காலமுதிர்வில்
20% இரு வருட வைப்புக்கு-மாதாந்த வட்டி
18% இரு வருட வைப்புக்கு-மாதாந்த வட்டி

குறைந்தபட்ச வைப்புப் பணம்ரூபா 500/-
மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிறுவனம்

தலைமை அலுவலகம்- 54, பாங்ஷால் வீதி கொழும்பு-11
124, கே.கே.எஸ்வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி- 418

## வடபகுதி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படுவதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

கெக்கிராவ பகுதியில் இனந் தெரியாத சில நபர்கள் துப் பாக்கிகளைச் சேகரித்து வட பகுதியிலுள்ள சிலருக்கு விற் பனைசெய்யப்பட்டு வருகிறது எனத் தமக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளதாகத் மதவாச்சி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு அறிவித்துள்ளார்.

ஒரு துப்பாக்கி 3,500 ரூபா வுக்கு விற்பனை செயயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இவ்விவகாரம் குறித்துப் பூரண விசாரணை நடத்தித் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கு மாறு வடபிராந்திய பொலிஸ் மாஅதிபர் திரு சிறில் ஹேரத் மதவாச்சிப் பொலிஸ்நிலைய நிலையப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். (இ)

## விவநாத்தின் 'செஞ்சரி'

சென்னை, ஜன. 13

இந்திய கிரிக்கட் வீரர் குண் டபபா விஸ்வநாத் தமது 50 வது டெஸ்டான இந்திய-மேற் கிந்திய 4வது கிரிக்கட் டெஸ் டின் முதல் இன்னிங்ஸில் ஆட்டமிழக்காது 120 ஓட்டங் களைப் பெற்ருர். ஆட்டநேர முடிவில் இந்தியா 8 விக்கட்டுகள் இழப்புக்கு 250 ஓட்டங்களைப் பெற்றிருந் தது.

மேற்கிந்தியக் கோஷ்டி முதல் இன்னிங்கில் 228 ஓட் டங்களைப் பெற்றது.

## கோழித்தீன் தொழிற்சாலை

[யாழ்ப்பாணம்]

வடஇலங்கையில் கோழித் தீன் உற்பத்திசெய்யும் தொழிற்சாலையொன்றினை அமைக்க யாழ் கடற்ருெழில் கூட்டுறவுச்சங்கத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது. [செ]

## புதுநம்பிக்கை...

[1ம்பக்கத் தொடர்ச்சி]

ளத்தில் புதிய நம்பிக்கை பொங்க, வீட்டு முற்றத்தில் பால் பொங்கி குழந் தைகளின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க, பொங்கல் திருநாளை வரவேற்போம்.

## எம். ஜி. ஆர். ...

(11-ம் பக்கத்தொடர்ச்சி]

இவைமட்டுமல்ல; இத்தனைக் கும் சிகரம் வைத்தாற்போல மற்றுமொரு சம்பவமும் நடந் தது.

எம். ஜி ஆர். மீது கொண்ட தீவிர பக்தியினுல், எம். ஜி ஆரின் 'கட் அவுட்'டைத் தாங்கிச் சென்ற ஜீப் போன வழியில், நிலத்தையும் சற்று கையால் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்ட வயது முதிர்ந்த பெண்களையும் நான் கண்டேன்! எம். ஜி ஆரே நேரில் காட்சிதந்ததாக அவர்கள் கருதிவிட்டனர்.

இவை, நான்கேட்ட செய்தி கள் அல்ல; கண்ணுல் கண்ட சம்பவங்கள்!

எம். ஜி ஆர் மீது, தமிழ கத் தலைநகர் சென்னை தவிர ஏனைய மாவட்டங்களில், கிராமங்களில் மக்கள், குறிப் பாகபெண்கள் கொண்டிருந்த பயங்கர பக்திக்கு மேற்கண்ட நிகழ்ச்சியை விட வேறு என்ன 'சாம்பிள்' வேண்டும்? 1977 காலகட்டத்தில் எம். ஜி ஆர். அலை இப்படித்தான் வீசியது!

இதைவிட ஒரு பெரிய கதை யும் உண்டு. அது மிகவும் சுவையானது. இதனை அடுத்த வாரம் சுவையுங்கள்,

பொங்கும் மங்களம்
எங்கும் தங்குக
றிக்கோ சுவைஞர்களுக்கு எமது தித்திக்கும்
பொங்கல் வாழ்த்துக்கள்!
அன்பளிப்புச் செய்யக்கூடிய இறக்குமதி செய்யப்பட்ட
★ பிஸ்கட் ★ சொக்கலட்
★ சுவிங்கம் ★ பபிள்கம்
முதலியவற்றுக்கும் மற்றும்
கேக் வகைகள் - பொம்பே சுவீட்ஸ் - தேன் சிந்தும் பூந்தி
மஸ்கட் - ஐஸ்கிறீம் வகைகள் - கோழிப்பிரியாணி
மட்டன் றோல் - பற்றிஸ் - கட்லட்ஸ்
முதலியவற்றுக்கும் றிக்கோ...
பிறந்ததினம் ★ திருமணம்
ஆகிய வைபவங்களுக்கான சிறந்த
றிச்கேக் - பட்டர் கேக் வகைகளை ஆடர் கொடுத்து
ஐஸிங்' செய்து பெற்றுக்கொள்ளலாம்.
றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ்,
370, ஆஸ்பத்திரி வீதி, (போன்: 464-7889) யாழ்ப்பாணம்.

### 3- வது வருட நினைவாஞ்சலி



பி நவரத்தினம்
தோற்றம்: 17 7- 1915
நிறைவு: 15- 1- 1976
(நிர்வாக முகாமையாளர் -சிங்கப்பூர் பார்மஸி லிமிட் டெட், என். ஆர். இன்டஸ் றீஸ், யாழ்ப்பாணம்)

நினைவுகள் சாவதில்லை! எங் களைத் தவிக்கவிட்டு மீளாத் துயில் கொண்டுவிட்ட தங்க ளின் ஆத்மா சாந்தியடைய, தங்களது 3 வது ஆண்டு நிறைவுதினமான [15-1-79] நாளைபிரார்த்திக்கும் மனைவி, மக்கள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

230, நாவலர் வீதி,
1320 யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

நவக்கிரி குட்டியப்புலம் பாடசாலைக்கு முன்பாக 21 பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தோட்டம் செய்யக்கூடியது. விபரங்க ளுக்கு: செ. அப்புத்துரை, குப்பிழான், ஏழாலை. 1319